# 74. திருவுருமலைக்கோமகன்

## பஞ்சவிம்சதியதிக சதபங்கி

1.*கலைச்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

1. தனதன தானன தானன தானன
 தானன தானன தானன தானாதந்
 தனதன தானா தனனா தனனா தனனா
 தனதன தனதன தானதனா

**திருமலி தாரணி சீர்முரு காவடர்**
**சேனைய னேயொளிர் சேயவ னேமாவொண்**
**டெருளர தீதா வரதா திருவே பரிவே**
**திடமுடை மயில்வரு சேவகனே**
**திகழ்மறை பாடிடு தேமுத லேயதி**
**தீரமு ளோயறு தேசுரு வாவேதன்**
**செயல்புரி தேவா விமலா செனியா தவனே**
**சிறுமையில் பிரதம சேகரனே**
**சிதலையின் மாசுரர் சேதன னேசுக**
**தீபக மேயறு சீலமு ளோய்காலஞ்**
**செடிதபு காலா சிவனே செழுமா மணியே**
**சிவகண பதியிளை யோய்திணியா**
**சிலைவலர் சீய// ம தீவிர வேண் *மணி**
**சேரணி யோ+யுயர் தேகமு ளோய்போர்வெஞ்**
**சிலைவகிர் சேடா பொருநா திரிசூ லதரா**
**சிகிவரை யொலிமுனி தேசிகனே**

திருமலி தார் அணி சீர் முருகா அடர்
சேனையனே ஒளிர்சேயவனே மாஒண்
தெருளர் அதீதா வரதா திருவே பரிவே
திடம் உடை மயில்வரு சேவகனே

---

* கலை அறுபத்துநான்காதலின் கலைச்சீரென்பது : அறுபத்து நான்கு சீருடையதாமாறு காண்க.
**தார்** – கிண்கிணிமாலை.

// **அதிதீவிரவேள்** எனற்பாலது "அதீவிரவேள்" எனப் பொருந்திற்று.

* **மணிசேரணி** = திருக்கண்மணிமாலை.

+ **உயர்தேகம்** = மகாவிசுவரூபவடிவு.

திகழ்மறை பாடிடு தேமுதலே அதி
தீரம் உளோய் அறுதேசு உருவா வேதன்
செயல்புரி தேவா விமலா செனியாதவனே
சிறுமை இல் பிரதம சேகரனே
சிதலைஇல் மாசுரர் சேதனனே சுக
தீபகமே அறுசீலம் உளோய் காலம்
செடிதபு காலா சிவனே செழுமாமணியே
சிவகணபதி இளையோய் திணியா
சிலைவலர் சீயம் அதீவிரவேள் மணி
சேர்அணியோய் உயர்தேகம் உளோய் போர்வெம்
சிலைவகிர் சேடா பொருநா திரிசூலதரா
சிகிவரை ஒலி முனி தேசிகனே.

அழகுமிகுந்த கிண்கிணி மாலை அணிந்த அழகிய முருகப் பெருமானே! போர்வல்ல படை உடையவனே! பேரொளி வீசும் செவ்வேளே! பேரொளியுள்ள அறிஞர்க்கும் எட்டாதவனே! வரம் அளிப்பவனே! செல்வமே! அன்பே! வலிமையுடைய மயில் வாகனத்தில் ஏறிவரும் வீரனே! விளங்கும் வேதங்கள் பாடிடும் இனிய முதல்வனே! மிகுந்த தைரியம் உள்ளவனே! ஆறு ஒளி வடிவு ஆனவனே! பிரமதேவனின் படைப்புத் தொழிலைச் செய்த கடவுளே! மலம் அற்றவனே! பிறவாதவனே! குறை இல்லாத முதன்மையான அடிகளே! துன்பம் இல்லாத பெரிய தேவர்களின் ஞானாசிரியனே! இன்ப விளக்கே! ஆறு குணங்கள் உடையவனே! காலத்தையும் பாவத்தையும் ஒழிக்கும் திருவடி உடையவனே! சிவனே! வளமான சிறந்த மாணிக்கமே! சிவனாகிய கணபதியின் தம்பியே! திண்மையானவனே! வில்வல்ல வீரர் முன் சிங்கமே! பெருங்கோபம் உள்ள செவ்வேளே! உருத்திராக்க மணிமாலையை அணியாகக் கொள்பவனே! மகாதேகமான விசுவரூபம் கொண்டவனே! போரில்வல்ல கொடிய கிரௌஞ்ச மலையைப் பிளந்த இளையோனே! வீரனே! முத்தலைச் சூலம் பிடித்தவனே! சந்தமுனிவரான அருணகிரிநாதப் பெருமானின் ஞானாசிரியனே! 1

(இது அறுபத்துநான்கு சீர்களாய் அமைந்த முதல் அடி)

**தருமமெ யாரணர் சார்முனி யேகிளர்**
**தானைய னேநல தாயனை யாய்தூவின்**
**சருவரர் தாழ்தாய் துணையே சருவே சுரனே**
**தடநில வயவறு தாரகனே**
**சகவுயிர் நாடக சாமிச தாசிவ**
**தாரணி வோய்தொழு தாசர ணா0நீதந்**
**தயவுளர் தாதா நிபுணா தனிவா னவனே**
**தறுகணர் கருதலர் சார்பிலனே**
**சதமுனை வாசவர் சாதப தீயொரு**
**தாபமி லோய்விரி சாலமு ளோய்வாலஞ்**
**சடுவரி வாழ்வே சதுரா $தழன்மா மகனே**
**சவணர்கண் முதியர்கள் சார்புளனே**
**சலமறு தூயவ சாவிலி யேமிகு**
**சாரிய னேகுண சாகர மேசார்திண்**
**டலைமையர் மீளீ சனதா சருவா பரணா**
**தகைகெழு புலிமுனி தாழ்பெரியோய்**

*தருமம்மெய் ஆரணர் சார் முனியே கிளர்*
*தானையனே நலதாய் அனையாய் தூஇன்*
*சருவரர் தாழ் தாய் துணையே சருவஈசுரனே*
*தடநில வயவு அறு தாரகனே*
*சக உயிர் நாடக சாமி சதாசிவ*
*தார் அணிவோய் தொழுதாசர் அணா நீதம்*
*தயவுஉளர் தாதா நிபுணா தனிவானவனே*
*தறுகணர் கருதலர் சார்பு இலனே*
*சதம்உனை வாசவர் சாதபதீ ஒரு*
*தாபம் இலோய் விரிசாலம் உளோய் வால்அம்*
*சடுஅரி வாழ்வே சதுரா தழல் மாமகனே*
*சவணர்கள் முதியர்கள் சார்பு உளனே*
*சலம் அறு தூயவ சாவுஇலியே மிகு*
*சாரியனே குணசாகரமே சார்திண்*
*தலைமையர் மீளீ சனதா சருவ ஆபரணா*
*தகைகெழு புலிமுனி தாழ் பெரியோய்.*

---

**0 நீதம்** = விளையாடல்; வடசொல்.

**$ தழல்** = கார்த்திகை.

அறத்தையும் உண்மையையும் கடைப்பிடித்தொழுகும் வேதியர்கள் சார்ந்திருக்கும் முனிவனே! ஒளியுடைய படைக்கலம் உடையவனே! நல்ல தாய் போன்றவனே! தூய்மையும், இனிமையும் உள்ள அவியுணவு உண்ணும் தேவர்கள் வணங்கும் தாயின் துணையே! சருவேசுரனே! பெரிய மண்ணுலக ஆசையை ஒழிக்கும் பிரணவனே! உலக உயிர்களிடத்தில் ஐந்தொழில் நாடகம் நடத்தும் சாமி! சதாசிவனே! மாலை அணிபவனே! உன்னை வணங்கும் அடியார்களுக்குத் தலைவனே! கருணை உள்ளவர்களுக்குத் திருவிளையாடல் புரியும் தந்தையே! மிக வல்லவனே! ஒப்பற்ற தேவனே! குரூரமானவர்கள் உன்னை நினையாத பகைவர்கள் ஆகியோரைச் சாராதவனே! வச்சிராயுதம் ஏந்திய இந்திரனுக்கு மெய்யான தலைவனே! ஒரு துன்பமும் என்றும் இல்லாதவனே! பரந்த இந்திரசாலம் புரிபவனே! தூய்மையும் அழகும் உள்ள ஆறு தீப்பொறிகளின் வடிவான வாழ்வே! அறிஞனே! கார்த்திகை மாதர்களின் சிறந்த புதல்வனே! புண்ணிய சீலர்கள், கற்றோர்கள் ஆகியோரிடம் சார்பு உள்ளவனே! பொய்யை ஒழிக்கும் தூயவனே! மரணம் இல்லாதவனே! அதிகம் உலா வருவோனே! குணக்கடலையே சாரும் உறுதியான தலைவர்களின் அரசனே! மக்கள் வடிவே! எல்லா அணிகளும் உடையவனே! பெருமை பொருந்திய புலிக்கால் முனிவர் வணங்கும் பெரியோனே! 2

(இது அறுபத்துநான்கு சீர்களாய் அமைந்த இரண்டாம் அடி)

**செருமலி யாரயில் சேர்கரனேநிறை**
**தேனைய னேகமழ் தேயமு ளோய்பாவின்**
**றெரிய*ல தீசா பரமா திருமான் மருகா**
**+திடகுக செயிரறு சீடர்கணா**
**சிகலறு பாடகர் சேமமு தாலுயர்**
**தேரமர் வோய்பல தேசம னாகாதுஞ்**
**செயமுனி சேயே கழலோய் தினைமா வுணியே**
**சிறுகறு மருமறை தேடிறையே**

*** அதீசன்** = தனக்கோரீசனில்லாத் தலைவன்.

**+ திடம்** = உண்மை.

**சிதடுறு பாசகர் தீதடு கோபர**
**சீபதி யேபுகழ் சீலர ணாலாலுஞ்**
**செடிநகையாளீ திதியோய் ++செழியோ னிறைவா**
**சிவைசுத நதிசுத தேமமுதே**
**சிலதர்க ணாயக சீவனி யேதுதி**
**தேரது லாவறு சேகர னேசீர்வண்**
**டிலகவு லாசா திமிசோய் திருநீ றணிவோய்**
**திகில்வெலும் வலியருள் சீறடிதா**

*செருமலி ஆர்அயில் சேர்கரனே நிறை*
*தேன் ஐயனே கமழ்தேயம் உளோய் பாவின்*
*தெரியல் அதீசா பரமா திருமால் மருகா*
*திட குக செயிர்அறு சீடர் கள்நாச*
*இகல் அறு பாடகர் சேம முதால் உயர்*
*தேர் அமர்வோய் பல தேச மனா காதும்*
*செயமுனி சேயே கழலோய் தினைமா உணியே*
*சிறுகு அறும் அருமறை தேடு இறையே*
*சிதடுஉறு பாசகர் தீது அடு கோ பர*
*சீபதியே புகழ் சீலர் அணால் ஆலும்*
*செடி நகை ஆளீ திதியோய் செழியோன் இறைவா*
*சிவைசுத நதிசுத தேம் அமுதே*
*சிலதர்கள் நாயக சீவனியே துதி*
*தேர் அதுஉலா அறு சேகரனே சீர்வண்*
*திலக உலாசா திமிசோய் திருநீறு அணிவோய்*
*திகில்வெலும் வலிஅருள் சீறடி தா.*

போராற்றல் மிகுந்த கூர்மையான வேற்படையைத் திருக்கையில் தாங்கியவனே! முழு இன்பமான தலைவனே! மணக்கும் திருமேனியனே! பாமாலை ஏற்கும் மேலான ஈசனே! பரம் பொருளே! திருமாலின் மருமகனே! மெய்க் குகனே! குற்றங்களை நீக்கிய அடியார்களின் ஞானக்கண்ணே! குறையில்லாத பாடகருக்கு அரணாக உள்ள முதல்வனே! மேலான மயில் வாகனத்தில் ஏறியிருப்பவனே! பல நாடுகளுக்கும் அரசனே! வகுக்கும் சயமுனி வணங்கும் சேய்ப்பரமனே! தண்டை அணிந்தவனே! தினைமாவை உண்பவனே! குறைவு அற்ற அரிய வேதங்கள் தேடிக்

++ **செழியோன்** = பாண்டியன்.

கொண்டிருக்கும் இறைவனே! அறியாமை உள்ள மூடர்களின் தீய செயல்களை அழிக்கும் அரசனே! மேலான பார்வதியின் தலைவனே! புகழ்ந்து கூறும் குணமுடையவரின் தலைவனே! நிறைந்துள்ள குற்றங்களைப் போக்கும் ஆண்டவனே! காப்பவனே! பாண்டிய அரசனின் இறைவனே! பார்வதி பாலா! கங்கையின் மைந்தா! இனிய அமுதமே! அடியார்களின் தலைவனே! சஞ்சீவியே! துதிக்கும் தேரில் சுற்றிவரும் ஆறு திருமுடிகள் அணிந்தவனே! மேலான உள்ள மகிழ்ச்சி உள்ளவனே! வேங்கை மரம் ஆனவனே! திருநீறு அணிவோனே! அச்சத்தை வெல்லும் வலிமை அருளும் திருவடிகளைத் தந்தருள்வாயாக! 3

(இது அறுபத்துநான்கு கலைச்சீர் கொண்ட மூன்றாம் அடி)

**குருமலி நாரருள் கூர்மதி யோயொரு**
**கோனைய னேபல கோயிலு ளோய்கூவுங்**
**குருகில கோர்மா துகிலோய் குருசூழ் குமரா**
**குடமுனி வியனிலை கூறரசே**
**குகைதொறு மாடிடு கோமுரு கேயிடர்**
**கூரமி லோய்சுடர் கோசிக னேபோதங்**
**குயினிச போதா குழையோய் குனி0சா னகனே**
**குறமகள் சுரமகள் கூடருளோய்**
**குதலையென் மாசுகொல் கோதிலி யேநிமிர்**
**கோபதி யேயெணில் கோலமு ளோய்சீலங்**
**கொடு கொடு சீர்வா குதியே குழகா புலவா**
**குவிபகை மதியினர் கோளரியே**
**குலமிலி மாயமில் கோவண னேயிழி**
**கோரமி லோ*யொரு கோகருள் கோ+னார்வங்**
**குலைமருள்++ கோலா வனகா குரவார் புயனே**
**குகையுரு மலைவளர் கோமகனே.**

---

**0 சானகன்** = வில்லுடையோன்; சராசனனெனும் வடமொழி விகாரம்.

* **ஒரு கோகருள்கோன்** = ஒரு கழுதைக்கு நல்லருள் பாலித்த பெருமான். அருள் பாலித்த வரலாற்றை **ஸ்ரீ சுப்பிரமணிய வியாசத்தின்** 87 ஆங் கடாவிடையிற் காணலாம். கோகு = கழுதை.

**+ மருள் ஆர்வம்** = மயக்கமுடை (எனது) ஆசையை, குலை = கலையச்செய், மருள் ஆர்வம் எனக் கூட்டுக.

**++ கோலா** = தண்டாயுதபாணியே. கோல் = தண்டம்.

குருமலி நாரர் உள் கூர்மதியோய் ஒரு
 கோன் ஐயனே பல கோயில் உளோய் கூவும்
குருகு இலகு ஓர் மாதுகிலோய் குருசூழ் குமரா
 குடமுனி வியன்நிலை கூறு அரசே
குகைதொறும் ஆடிடும் கோ முருகே இடர்
 கூரம் இலோய் சுடர் கோசிகனே போதம்
குயில் நிச போதா குழையோய் குனிசானகனே
 குறமகள் சுரமகள் கூடு அருளோய்
குதலை என் மாசுகொல் கோது இலியே நிமிர்
 கோபதியே எணில் கோலம் உளோய் சீலம்
கொடு கொடு சீர்வாகுதியே குழகா புலவா
 குவிபகை மதியினர் கோள்அரியே
குலம் இலி மாயம் இல் கோவணனே இழி
 கோரம் இலோய் ஒரு கோகு அருள்கோன் ஆர்வம்
குலை மருள் கோலா அனகா குரவு ஆர் புயனே
 குகை உரு மலைவளர் கோமகனே.

மேலான அன்புடையார் நினைக்கும் கூர்மையான அறிவு உடையவனே! ஓர் அரசனின் தலைவனே! பல திருக்கோயில் களிலும் எழுந்தருளியுள்ளவனே! கூவும் கோழி விளங்கும் ஒப்பற்ற பெரிய கொடி உடையவனே! ஒளி சூழ்ந்த குமரனே! அகத்திய முனிவருக்கு மேலான நிலையை உபதேசித்த அரசனே! உயிர்களின் உள்ளக் குகைதோறும் நடம் செய்யும் அரச அழகே! துன்பமும் கொடுமையும் இல்லாதவனே! ஒளி வீசும் பட்டு உடுத்தியவனே! ஞானத்தை உபதேசிக்கும் உண்மையான ஞானாசிரியனே! காதணி அணிந்தவனே! வளையும் விற்படை உடையவனே! குறமகளான வள்ளியம்மையையும் தேவமகளான தெய்வயானை அம்மையையும் மணந்து அருள்புரிந்தவனே! அறிவிலா என் குற்றத்தை ஒழிக்கும் குற்றம் இல்லாதவனே! நிமிர்ந்த இந்திரனே! எண்ணில்லாத மூர்த்தங்கள் ஆக உள்ளவனே! அழகிய தோள்கள் உடையவனே! நற்குணங்ளை விரைவாகக் கொடுப்பாயாக. இளையோனே! புலவனே! திரண்ட பகைப் புத்தியுள்ளவர்க்குச் சிங்கமே! குலம் இல்லாதவனே! மயக்கம் இல்லாத திருக்கோவணம் அணிந்த அரசே! மயக்கும்

ஆசைகளைக் கெடுக்கும் தண்டாயுதபாணியே! தூயவனே! குராமலர் மாலைகள் அணிந்த திருத்தோள்கள் உடையவனே! குகை போன்ற வடிவம் அமைந்த மலைமேல் எழுந்தருளிய அரசனே! 4

(இது அறுபத்து நான்கு கலைச்சீர் கொண்ட நான்காம் அடி)

## 2. வஞ்சிவிருத்தம்

2. தனதன தானன தானதனா

**திருமலி தாரணி சீர்முருகா**
**தருமமெ யாரணர் சார்முனியே**
**செருமலி யாரயில் சேர்கரனே**
**குருமலி நாரருள் கூர்மதியோய்.**

*திருமலி தார் அணி சீர் முருகா*
*தரும மெய் ஆரணர் சார் முனியே*
*செருமலி ஆர்அயில் சேர் கரனே*
*குருமலி நாரர்உள் கூர்மதியோய்.*

அழகு மிகுந்த கிண்கிணி மாலை அணிந்த அழகிய முருகப் பெருமானே! அறத்தையும் உண்மையையும் கடைப்பிடிக்கும் வேதியர் சார்ந்திருக்கும் முனிவனே! போர் ஆற்றல் மிகுந்த கூர்மையான வேற்படையைத் திருக்கையில் தாங்கியவனே! மேலான அன்பர்கள் நினைக்கும் கூர்மையான அறிவுடையவனே! 2

**திகழ்மறை பாடிடு தேமுதலே**
**சகவுயிர் நாடக சாமிசதா**
**சிகலறு பாடகர் சேமமுதால்**
**குகைதொறு மாடிடு கோமுருகே.**

*திகழ் மறை பாடிடுதே முதலே*
*சக உயிர் நாடக சாமிசதா*
*சிகல் அறு பாடகர் சேம முதால்*
*குகை தொறும் ஆடிடு கோமுருகே.*

விளங்கும் வேதங்கள் புகழ்ந்து பாடும் இனிய முதல்வனே! எப்போதும் உலக ஆன்மாக்களிடத்து ஐந்தொழில் நாடகம் நடத்தும் ஞானாசிரியனே! குறை அற்ற பாடகரின் அரணாக உள்ள முதல்வனே! ஆன்மாக்களின் உள்ளக் குகைதோறும் நடம் செய்யும் அரசனாகிய முருகப்பெருமானே! 3

**சிதலையின் மாசுரர் சேதனனே**
**சதமுனை வாசவர் சாதபதீ**
**சிதடுறு பாசகர் தீதடுகோ**
**குதலையென் மாசுகொல் கோதிலியே.**

*சிதலை இல்மாசுரர் சேதனனே*
*சதமுனை வாசவர் சாதபதீ*
*சிதடுஉறு உபாசகர்தீது அடுகோ*
*குதலை என் மாசுகொல் கோது இலியே.*

துன்பம் இல்லாத பெரிய தேவர்கள் தம் ஞானகுருவே! வச்சிராயுதம் உடைய இந்திரனுக்கு மெய்த்தலைவனே! அறியாமை கொண்டுள்ள சீடர்களின். தீச்செயல்களை அழிக்கும் அரசனே! அறிவில்லாதவன் ஆன என் குற்றத்தை ஒழிக்கும் குற்றம் இல்லாதவனே! 4

**சிலைவலர் சீயம தீவிரவேள்**
**சலமறு தூயவ சாவிலியே**
**சிலதர்க ணாயக சீவனியே**
**குலமிலி மாயமில் கோவணனே.**

*சிலை வலர் சீயம் அதீவிரவேள்*
*சலம் அறு தூயவசாவு இலியே*
*சிலதர்கள் நாயக சீவனியே*
*குலம் இலி மாயம் இல் கோவணனே.*

வில் வீரர்க்குமுன் சிங்கமே! மிகு கோபம் கொள்ளும் செவ்வேளே! பொய்ம்மையை ஒழிக்கும் தூயவனே! இறப்பு இல்லாதவனே! அடியார்களின் தலைவனே! சஞ்சீவியே! குலம் ஒன்றும் இல்லாதவனே! பொய் இல்லாத திருக்கோவணம் அணிந்தவனே! 5

3 தனதன தனதன தானதனா

**திடமுடை மயில்வரு சேவகனே**
**தடநில வயவறு தாரகனே**
**திடகுக செயிரறு சீடர்கணா**
**குடமுனி வியனிலை கூறரசே.**

*திடம் உடை மயில் வரு சேவகனே*
*தட நில வயவு அறு தாரகனே*
*திடகுக செயிர் அறு சீடர்கணா*
*குடமுனி வியன் நிலை கூறுஅரசே.*

வலிமையுடைய மயில்வாகனத்தில் ஏறிவரும் வீரனே! இப்பெரிய மண்ணுலக ஆசையை ஒழிக்கும் பிரணவனே! உண்மையான குகப்பெருமானே! குற்றத்தை ஒழித்த அடியார்களின் ஞானக்கண்ணாக உள்ளவனே! அகத்திய முனிவர்க்கு மேலான நிலையை உபதேசித்த அரசனே! 6

**சிறுமையில் பிரதம சேகரனே**
**தறுகணர் கருதலர் சார்பிலனே**
**சிறுகறு மருமறை தேடிறையே**
**குறமகள் சுரமகள் கூடருளோய்.**

*சிறுமையில் பிரதம சேகரனே*
*தறுகணர் கருதலர் சார்பு இலனே*
*சிறுகு அறும் அருமறை தேடு இறையே*
*குறமகள் சுரமகள் கூடு அருளோய்.*

குறையில்லாத முதன்மையான திருமுடியுடையவனே! குரூரமானவர், உன்னை நினையாத பகைவர் சார்பு இல்லாதவனே! குற்றம் அற்ற அரிய வேதங்கள் தேடிக்கொண்டிருக்கும் இறைவனே! குறமகளான வள்ளியம்மையையும் தேவமகளான தெய்வயானையையும் மணந்த அருள் உடையவனே!

**சிவகண பதியிளை யோய்தினியா**
**சவணர்கண் முதியர்கள் சார்புளனே**
**சிவைசுத நதிசுத தேமமுதே**
**குவிபகை மதியினர் கோளரியே.**

*சிவகணபதி இளையோய் திணியா*
*சவணர்கள் முதியர்கள் சார்புஉளனே*
*சினஅசுத நதிசுத தேம் அமுதே*
*குவிபகை மதியினர் கோள்அரியே.*

சிவனாகிய கணபதியின் தம்பியே! திண்மையானவனே! புண்ணியச் சீலர், கற்றவர்கள் சார்பில் இருப்பவனே! உமையம்மையின் புதல்வனே! கங்கை நதியின் மைந்தனே! இனிய அமுதமே! திரண்ட பகையான புத்தியுடையவர்க்குச் சிங்கமே! 8

**சிகிவரை யொலிமுனி தேசிகனே**
**தகைகெழு புலிமுனி தாழ்பெரியோய்**
**திகில்வெலும் வலியருள் சீறடிதா**
**குகையுரு மலைவளர் கோமகனே.**

*சிகிவரை ஒலிமுனி தேசிகனே*
*தகைகெழு புலிமுனி தாழ் பெரியோய்*
*திகில் வெலும் வலி அருள் சீறடிதா*
*குகை உரு மலை வளர் கோமகனே.*

அருணகிரிநாதரான சந்தமுனியின் ஞானாசிரியனே! பெருமை பொருந்திய புலிக்கால் முனிவர் வணங்கும் பெரியோனே! வெற்றிகொள்ளும் வலிமையை அருளும் உன் சிறிய திருவடிகளைத் தந்தருள்வாயாக! குகை போன்ற உருவம் அமைந்த மலையில் எழுந்தருளியுள்ள அரசனே! 9

4 தானன தானன தானதனா

**சேனைய னேயொளிர் சேயவனே**
**தானைய னேநல தாயனையாய்**
**தேனைய னேகமழ் தேயமுளோய்**
**கோனைய னேபல கோயிலுளோய்.**

*சேனையனே ஒளிர் சேயவனே*
*தானையனே நல தாய் அனையாய்*
*தேன் ஐயனே கமழ் தேயம் உளோய்*
*கோன் ஐயனே பல கோயில் உளோய்.*

படையுடையவனே! பேரொளி வீசும் செவ்வேளே! படைக்கலம் உடையவனே! நல்ல அன்னை போன்றவனே! இனிய தலைவனே! மணக்கும் திருமேனி உள்ளவனே! அரசனின் தலைவனே! பல திருக்கோயில்களில் உள்ளவனே! 10

**தீரமு ளோயறு தேசுருவா**
**தாரணி வோய்தொழு தாசரணா**
**தேரமர் வோய்பல தேசமனா**
**கூரமி லோய்சுடர் கோசிகனே.**

*தீரம் உளோய் அறு தேசு உருவா*
*தார் அணிவோய் தொழு தாசர் அணா*
*தேர் அமர்வோய் பல தேச மனா*
*கூரம் இலோய் சுடர் கோசிகனே.*

தைரியம் உள்ளவனே! ஆறு தீப்பொறிகளின் வடிவானவனே! கிண்கிணி மாலை அணிபவனே! வணங்கும் அடியாரின் தலைவனே! தேரின்மீது அமர்ந்திருப்பவனே! பல நாடுகளுக்கும் அரசனே! கொடுமை இல்லாதவனே! ஒளிவீசும் பட்டு உடுத்தியவனே! 11

**தீபக மேயறு சீலமுளோய்**
**தாபமி லோய்விரி சாலமுளோய்**
**சீபதி யேபுகழ் சீலரணால்**
**கோபதி யேயெணில் கோலமுளோய்.**

*தீபகமே அறுசீலம் உளோய்*
*தாபம் இலோய் விரிசாலம் உளோய்*
*சீபதியே புகழ் சீலர் அணால்*
*கோபதியே எணில் கோலம் உளோய்.*

விளக்கே! ஆறு குணங்கள் உள்ளவனே! ஒரு துன்பமும் இல்லாதவனே! பரந்த இந்திரசாலம் உடையவனே! பார்வதியின் தலைவனே! புகழ்ந்து கூறும் நற்குணம் உடையவர் தலைவனே! இந்திரனே! எண்ணில்லாத மூர்த்தங்கள் உடையவனே! 12

**சேரணி யோயுயர் தேகமுளோய்**
**சாரிய னேகுண சாகரமே**
**தேரது லாவறு சேகரனே**
**கோரமி லோயொரு கோகருள்கோன்.**

*சேர் அணியோய் உயர்தேகம் உளோய்*
*சாரியனே குணசாகரமே*
*தேர் அது உலா அறு சேகரனே*
*கோரம் இலோய் ஒரு கோகு அருள்கோன்*

திருமேனியில் சேரும் அணிகலன் உடையவனே! மகா விசுவரூபம் உடையவனே! இடம் வலம் எனச் சார்ந்து வருவோனே! குணக்கடலே! மயில்வாகனமான தேரின்மீது உலாவரும் ஆறுதிருமுடிகள் உடையவனே! அச்சம் இல்லாதவனே! ஒரு கழுதைக்கும் அருள்புரிந்த அரசனே! 13

**சீர்முரு காவடர் சேனையனே**
**சார்முனி யேகிளர் தானையனே**
**சேர்கர னேநிறை தேனையனே**
**கூர்மதி யோயொரு கோனையனே.**

*சீர் முருகா அடர் சேனையனே*
*சார் முனியே கிளர் தானையனே*
*சேர்கரனே நிறைதேன் ஐயனே*
*கூர்மதியோய் ஒரு கோன் ஐயனே.*

அழகிய முருகப் பெருமானே! போர்வல்ல படையுடையவனே! சேரும் முனிவனே! ஒளியுடைய படைக்கலம் உடையவனே! சேரும் திருக்கையனே! முழு இன்பமான தலைவனே! கூர்மையான அறிவுடையோனே! ஒரு அரசனின் தலைவனே! 14

**தேமுத லேயதி தீரமுளோய்**
**சாமிச தாசிவ தாரணிவோய்**
**சேமமு தாலுயர் தேரமர்வோய்**
**கோமுரு கேயிடர் கூரமிலோய்.**

தேம் முதலே அதிதீரம் உளோய்
சாமி சதாசிவ தார் அணிவோய்
சேம முதால் உயர்தேர் அமர்வோய்
கோ முருகே இடர் கூரம் இலோய்.

இனிய முதல்வனே! மிகுந்த தைரியம் உள்ளவனே! ஞானாசிரியனே! சதாசிவனே! மாலை அணிவோனே! அரசனான அழகே! துன்பமும் கொடுமையும் இல்லாதவனே! 15

**சேதன னேசுக தீபகமே**
**சாதப தீயொரு தாபமிலோய்**
**தீதடு கோபர சீபதியே**
**கோதிலி யேநிமிர் கோபதியே.**

சேதனனே சுக தீபகமே
சாதபதீ ஒரு தாபம் இலோய்
தீதுஅடு கோ பர சீபதியே
கோது இலியே நிமிர் கோபதியே.

அறிவானவனே! இன்ப விளக்கே! மெய்த் தலைவனே! ஒரு துன்பமும் இல்லாதவனே! தீமையை ஒழிக்கும் அரசே! மேலான பார்வதியின் தலைவனே! குற்றம் இல்லாதவனே! உயர்ந்த இந்திரனே! 16

**தீவிர வேண்மணி சேரணியோய்**
**சாவிலி யேமிகு சாரியனே**
**சீவனி யேதுதி தேரதுலா**
**கோவண னேயிழி கோரமிலோய்.**

தீவிர வேள்மணி சேர் அணியோய்
சாவு இலியே மிகு சாரியனே
சீவனியே துதி தேர் அதுலா
கோ வணனே இழி கோரம் இலோய்

மிகுந்த கோபம் உடைய செவ்வேளே! அழகு சேர்ந்த அணிகள் உடையவனே! இறப்பு இல்லாதவனே! மிக்க இடம் வலம் வருவோனே! சஞ்சீவியே! துதிக்கும் தேவருடைய ஒப்பில்லாதவனே! திருக்கோவணம் உடையவனே! கீழான அச்சம் இல்லாதவனே! 17

5 தனனா தனனா தானதனா

**திருவே பரிவே சேவகனே**
**சருவே சுரனே தாரகனே**
**திருமான் மருகா சீடர்கணா**
**குருசூழ் குமரா கூறரசே.**

திருவே பரிவே சேவகனே
சருவே சுரனே தாரகனே
திருமால் மருகா சீடர்கணா
குரு சூழ் குமரா கூறு அரசே.

செல்வமே! அன்பே! வீரனே! சருவேசுரனே! பிரணவனே! திருமாலின் மருமகனே! அடியாரின் ஞானக்கண்ணே! ஒளிசூழ்ந்த குமரனே! உபதேசிக்கும் அரசனே! 18

6 தனதன தானா தனனா

**தெருளர தீதா வரதா**
**சருவரர் தாழ்தாய் துணையே**
**தெரியல தீசா பரமா**
**குருகில கோர்மா துகிலோய்.**

தெருளர் அதீதா வரதா
சருவரர் தாழ் தாய் துணையே
தெரியல் அதீசா பரமா
குருகு இலகு ஓர்மா துகிலோய்.

அறிஞர்க்கு எட்டாதவனே! வரம் அருள்பவனே! அவியுணவு கொள்ளும் தேவர்கள் வணங்கும் அன்னையின் துணையே! மாலை அணிந்த பரமேசா! பரமனே! கோழி விளங்கும் ஒப்பற்ற பெரிய கொடியுடையவனே! 19

**செயல்புரி தேவா விமலா**
**தயவுளர் தாதா நிபுணா**
**செயமுனி சேயே கழலோய்**
**குயினிச போதா குழையோய்.**

*செயல்புரி தேவா விமலா*
*தயவு உளர் தாதா நிபுணா*
*செயமுனி சேயே கழலோய்*
*குயில்நிச போதா குழையோய்*

செயலைச் செய்யும் கடவுளே! மலம் அற்றவனே! கருணையுள்ளவரின் தந்தையே! மிக வல்லவனே! செய முனிவர் வணங்கும் சேயவனே! தண்டை அணிந்தவனே! உபதேசிக்கும் உண்மையான ஞானாசிரியனே! காதணி அணிந்துள்ளவனே! 20

**செடிதபு காலா சிவனே**
**சடுவரி வாழ்வே சதுரா**
**செடிநகை யாளீ திதியோய்**
**கொடுகொடு சீர்வா குதியே.**

*செடி தபு காலா சிவனே*
*சடுஅரி வாழ்வே சதுரா*
*செடி நகை ஆளீ திதியோய்*
*கொடுகொடு சீர் வாகுதியே.*

குற்றத்தை ஒழிக்கும் திருவடியுடையவனே! சிவபெருமானே! ஆறு ஒளியான வாழ்வே! அறிஞனே! குற்றங்களை ஒழிக்கும் ஆண்டவனே! காப்பவனே! அழகிய தோள்களுடையவனே! விரைவாகக் கொடுத்தருள்வாயாக! 21

**சிலைவகிர் சேடா பொருநா**
**தலைமையர் மீளீ சனதா**
**திலகவு லாசா திமிசோய்**
**குலைமருள் கோலா வனகா.**

*சிலை வகிர் சேடா பொருநா*
*தலைமையர் மீளீ சனதா*
*திலக உலாசா திமிசோய்*
*குலைமருள் கோலா அனகா.*

கிரௌஞ்ச மலையைப் பிளந்த இளையோனே! வீரனே! தலைமையுடையவர் அரசனே! மக்கள் வடிவானவனே! மேலான

உள்ள மகிழ்ச்சியுடையவனே! வேங்கை மரம் ஆனவனே! ஆசை என்னும் மயக்கத்தைக் கலைக்கும் தண்டாயுதபாணியே! தூயவனே! 22

## 3. வஞ்சித்துறை

7 தானதனா தானதனா

**சேனையனே சேயவனே**
**தானையனே தாயனையாய்**
**தேனையனே தேயமுளோய்**
**கோனையனே கோயிலுளோய்.**

சேனையனே சேயவனே
தானையனே தாய் அனையாய்
தேன் ஐயனே தேயம் உளோய்
கோன் ஐயனே கோயில் உளோய்.

படையுடையவனே! சேயவனே! படைக்கலம் உடையவனே! தாய் போன்றவனே! இனிய தலைவனே! உடம்பு உடையவனே! அரசனின் தலைவனே! திருக்கோயிலில் உள்ளவனே! 23

**தீரமுளோய் தேசுருவா**
**தாரணிவோய் தாசரணா**
**தேரமர்வோய் தேசமனா**
**கூரமிலோய் கோசிகனே.**

தீரம் உளோய் தேசு உருவா
தார் அணிவோய் தாசர் அணா
தேர் அமர்வோய் தேசமனா
கூரம் இலோய் கோசிகனே.

தைரியம் உள்ளவனே! ஒளி உருவானவனே! கிண்கிணி மாலை அணிவோனே! அடியார்தம் தலைவனே! தேரில் அமர்வோனே! நாடுகளுக்கு அரசனே! கொடுமை இல்லாதவனே! பட்டாடை அணிந்தவனே! 24

**தீபகமே சீலமுளோய்**
**தாபமிலோய் சாலமுளோய்**
**சீபதியே சீலரணால்**
**கோபதியே கோலமுளோய்**

*தீபகமே சீலம் உளோய்*
*தாபம் இலோய் சாலம் உளோய்*
*சீபதியே சீலர் அணால்*
*கோபதியே கோலம் உளோய்.*

விளக்கே! குணமுள்ளவனே! துன்பம் இல்லாதவனே! இந்திரசாலம் உள்ளவனே! பார்வதியின் தலைவனே! நற்குணமுடையோரின் தலைவனே! இந்திரனே! மூர்த்தங்கள் உடையவனே! 25

**சேரணியோய் தேகமுளோய்**
**சாரியனே சாகரமே**
**தேரதுலா சேகரனே**
**கோரமிலோய் கோகருள்கோன்.**

*சேர் அணியோய் தேகம் உளோய்*
*சாரியனே சாகரமே*
*தேர் அதுலா சேகரனே*
*கோரம் இலோய் கோகு அருள் கோன்.*

சேரும் அணிகலமுடையவனே! தேகம் உடையவனே! இடம் வலம் எனச் சாரிவருவோனே! கடலே! தேருடைய ஒப்பில்லாதவனே! திருமுடி உடையவனே! அச்சம் இல்லாதவனே! கழுதைக்கும் அருளும் அரசனே! 26

8 தான தனானா தனனா

**சீர்முருகாசே னையனே**
**சார்முனியேதா னையனே**
**சேர்கரனேதே னையனே**
**கூர்மதியோய்கோ னையனே.**

*சீர்முருகா சேனையனே*
*சார்முனியே தானையனே*
*சேர்கரனே தேன்ஐயனே*
*கூர்மதியோய் கோன்ஐயனே.*

அழகிய முருகா! படையுடையவனே! சாரும் முனிவனே! படைக்கலம் உடையவனே! சேரும் திருக்கையனே! இனிய தலைவனே! கூர்மையான அறிவுடையவனே! அரசனின் தலைவனே! 27

**தேமுதலேதீ ரமுளோய்**
**சாமிசதாதா ரணிவோய்**
**சேமமுதால்தே ரமர்வோய்**
**கோமுருகேகூ ரமிலோய்.**

*தேமுதலே தீரம் உளோய்*
*சாமிசதா தார் அணிவோய்*
*சேமமுதால் தேர் அமர்வோய்*
*கோமுருகே கூரம் இலோய்.*

இனிய முதல்வனே! தைரியம் உள்ளவனே! ஞானாசிரியனே! எப்போதும் மாலை அணிவோனே! அரணாக உள்ள முதல்வனே! தேரில் அமர்வோனே! அரசனான அழகே! கொடுமை இல்லாதவனே! 28

**சேதனனேதீ பகமே**
**சாதபதீதா பமிலோய்**
**தீதடுகோசீ பதியே**
**கோதிலியேகோ பதியே.**

*சேதனனே தீபகமே*
*சாதபதீ தாபம் இலோய்*
*தீது அடுகோ சீபதியே*
*கோது இலியே கோபதியே.*

அறிவுடையோனே! விளக்கே! மெய்த்தலைவனே! துன்பம் இல்லாதவனே! தீமையை ஒழிக்கும் அரசனே! தலைவனே! குற்றம் இல்லாதவனே! இந்திரனே! பார்வதி தேவியின் தலைவனே! 29

**தீவிரவேள்சே ரணியோய்**
**சாவிலியேசா ரியனே**
**சீவனியேதே ரதுலா**
**கோவணனேகோ ரமிலோய்.**

*தீவிரவேள் சேர் அணியோய்*
*சாவுஇலியே சாரியனே*
*சீவனியே தேர் அது உலா*
*கோவணனே கோரம் இலோய்.*

பெருங்கோபம் உடைய செவ்வேளே! சேரும் அணிகலன் அணிந்தவனே! இறப்பு இல்லாதவனே! இடம் வலம் எனச் சாரியாக வருவோனே! சஞ்சீவியே! தேரினில் உலாவரும் திருக்கோவணம் உடையவனே! அச்சம் இல்லாதவனே! 30

9. தானன தானதனா

**தாரணி சீர்முருகா**
**ஆரணர் சார்முனியே**
**ஆரயில் சேர்கரனே**
**நாரருள் கூர்மதியோய்.**

*தார் அணி சீர் முருகா*
*ஆரணர் சார்முனியே*
*ஆர் அயில் சேர்கரனே*
*நாரர் உள் கூர்மதியோய்.*

பெருங்கோபம் உடைய செவ்வேளே! சேரும் அணிகலன் அணிந்தவனே! இறப்பு இல்லாதவனே! இடம் வலம் எனச் சாரியாக வருவோனே! சஞ்சீவியே! தேரினில் உலாவரும் திருக்கோவணம் உடையவனே! அச்சம் இல்லாதவனே! 31

**பாடிடு தேமுதலே**
**நாடக சாமிசதா**
**பாடகர் சேமமுதால்**
**ஆடிடு கோமுருகே.**

பாடிடு தே முதலே
நாடக சாமி சதா
பாடகர் சேம முதால்
ஆடிடு கோ முருகே.

பாடப்படுகின்ற இனிய முதல்வனே! எப்போதும் நடம் செய்யும் ஞானகுருவே! பாடகரின் அரணான முதல்வனே! ஆடல்புரியும் அரசனான அழகே! 32

10. தானதனா தனனா

**மாசுரர்சே தனனே**
**வாசவர்சா தபதீ**
**பாசகர்தீ தடுகோ**
**மாசுகொல்கோ திலியே.**

*மாசுரர் சேதனனே*
*வாசவர் சாதபதீ*
*பாசகர் தீது அடுகோ*
*மாசுகொல் கோது இலியே.*

பெரிய தேவர்களின் ஞானாசிரியனே! இந்திரனின் மெய்த்தலைவனே! பாசமுடையவர் தீய செயல்களை ஒழிக்கும் அரசனே! குற்றத்தை ஒழிக்கும் குற்றம் இல்லாதவனே! 33

**சீயமதீ விரவேள்**
**தூயவசா விலியே**
**நாயகசீ வனியே**
**மாயமில்கோ வணனே.**

*சீயம் அதீவிரவேள்*
*தூயவ சாவு இலியே*
*நாயக சீவன்நியே*
*மாயம் இல் கோவணனே.*

சிங்கமே! பெருங்கோபமுடையவனே! தூயவனே! இறப்பு இல்லாதவனே! தலைவனே! சஞ்சீவியே! பொய் இல்லாத திருக்கோவணம் உடையவனே! 34

11. தனனதனா தனனா

**மயில்வருசே வகனே**
**வயவறுதா ரகனே**
**செயிரறுசீ டர்கணா**
**வியனிலைகூ றரசே.**

*மயில் வரு சேவகனே*
*வயவு அறு தாரகனே*
*செயிர் அறு சீடர்கணா*
*வியன்நிலை கூறு அரசே.*

மயில் வாகனத்தில் ஏறிவரும் வீரனே! ஆசை ஒழிக்கும் பிரணவனே! குற்றம் அற்ற அடியார்தம் ஞானக்கண்ணே! மேலான நிலையை உபதேசிக்கும் அரசனே! 35

**பிரதமசே கரனே**
**கருதலர்சார் பிலனே**
**அருமறைதே டிறையே**
**சுரமகள்கூ டருளோய்.**

*பிரதம சேகரனே*
*கருதலர் சார்பு இலனே*
*அருமறை தேடு இறையே*
*சுரமகள் கூடு அருளோய்.*

முதன்மையான திருமுடி உடையவனே! உன்னை நினையாத பகைவரைச் சாராதவனே! அரிய வேதங்கள் தேடும் இறைவனே! தேவமகளான தெய்வயானையை மணந்த அருளோனே! 36

12. தனதன தானதனா

**பதியிளை யோய்திணியா**
**முதியர்கள் சார்புளனே**
**நதிசுத தேமமுதே**
**மதியினர் கோளரியே.**

பதி இளையோய் திணியா
முதியர்கள் சார்பு உளனே
நதிசுத தே அமுதே
மதியினர் கோள்அரியே.

தலைவனான இளையோனே! உறுதியானவனே! கற்றவர்கள் சார்பில் உள்ளவனே! கங்கை நதியின் மைந்தனே! இனிய அமுதமே! அறிவுடையார் பற்றிக்கொள்ளும் ஒளியே! 37

**ஒலிமுனி தேசிகனே**
**புலிமுனி தாழ்பெரியோய்**
**வலியருள் சீறடிதா**
**மலைவளர் கோமகனே.**

ஒலிமுனி தேசிகனே
புலி முனி தாழ் பெரியோய்
வலி அருள் சீறடிதா
மலைவளர் கோமகனே.

சந்தமுனியான அருணகிரிநாதரின் ஞானாசிரியனே! புலிக்கால் முனி வணங்கும் பெரியோனே! வலிமை அருளும் சிறிய அடியைத் தருவாயாக. மலைமேல் எழுந்தருளும் அரசனே! 38

13. தனதன தானா

**தெருளர தீதா**
**சருவரர் தாழ்தாய்**
**தெரியல தீசா**
**குருகில கோர்மா.**

தெருளர் அதீதர்
சருவரர் தாழ்தாய்
தெரியல் அதீசா
குருகு இலகு ஓர்மா.

அறிஞர்க்கும் எட்டாதவனே! அவியுணவு கொள்ளும் தேவர்கள் வணங்கும் தாயே! மாலையது உடைய பரமேசா! கோழிக் கொடி விளங்கும் ஓர் அழகனே! 39

**செயல்புரி தேவா**
**தயவுளர் தாதா**
**செயமுனி சேயே**
**குயினிச போதா.**

*செயல்புரி தேவா*
*தயவு உளர் தாதா*
*செய முனி சேயே*
*குயில் நிச போதா.*

செயலைச் செய்யும் கடவுளே! கருணையுடையவர் தந்தையே! செய முனியின் சேய்ப்பரமனே! உபதேசம் புரியும் உண்மை ஞானாசிரியனே! 40

**செடிதபு காலா**
**சடுவரி வாழ்வே**
**செடிநகை யாளீ**
**கொடுகொடு சீர்வா.**

*செடி தபு காலா*
*சடு அரி வாழ்வே*
*செடி நகை ஆளீ*
*கொடு கொடு சீர்வா.*

குற்றத்தை ஒழிக்கும் திருவடியுடையவனே! ஆறு தீச்சுடர் ஆன வாழ்வே! குற்றத்தை ஒழிக்கும் ஆண்டவனே! விரைவாகக் கொடுப்பாயாக! அழகனே வா! 41

**சிலைவகிர் சேடா**
**தலைமையர் மீளீ**
**திலகவு லாசா**
**குலைமருள் கோலா.**

*சிலைவகிர்சேடா*
*தலைமையர் மீளீ*
*திலக உலாசா*
*குலைமருள் கோலா.*

கிரௌஞ்ச மலையைப் பிளந்த இளையோனே! தலைமை யானவரின் அரசனே! மேலான உள்ள மகிழ்ச்சியுடையோனே! மயக்கத்தை ஒழிக்கும் தண்டாயுதபாணியே! 42

14. தனனா தனனா

**திருவே பரிவே**
**சருவே சுரனே**
**திருமான் மருகா**
**குருசூழ் குமரா.**

திருவே பரிவே
சருவே சுரனே
திருமால் மருகா
குரு சூழ் குமரா.

செல்வமே! அன்பே! சருவேசுரனே! திருமாலின் மருமகனே! ஒளி சூழ்ந்த குமரனே! 43

**செனியா தவனே**
**தனிவா னவனே**
**தினைமா வுணியே**
**குனிசா னகனே.**

செனியாதவனே
தனிவானவனே
தினை மா உணியே
குனி சானகனே.

பிறவாதவனே! ஒப்பற்ற தேவனே! தினை மாவை உண்பவனே! வளையும் வில் ஏந்தியவனே! 44

**செழுமா மணியே**
**தழன்மா மகனே**
**செழியோ னிறைவா**
**குழகா புலவா.**

செழுமாமணியே
தழல் மாமகனே
செழியோன் இறைவா
குழகா புலவா.

வளமான சிறந்த மாணிக்கமே! கார்த்திகை மாதரின் சிறந்த மகனே! பாண்டியனின் இறைவனே! இளையோனே! புலவனே! 45

**திரிசூ லதரா**
**சருவா பரணா**
**திருநீ றணிவோய்**
**குரவார் புயனே.**

திரிசூலதரா
சருவ ஆபரணா
திருநீறு அணிவோய்
குரவு ஆர் புயனே.

முத்தலைச் சூலத்தைக் கையில் பிடித்தவனே! எல்லா அணிகலன்களும் உடையவனே! திருநீறு அணிபவனே! குரா மலர் சூடிய திருத்தோளுடையவனே! 46

## 4. வெண்டளையான் வந்த தரவுக் கொச்சகக் கலிப்பா

15. தானதனா தானந் தனனதனா தானதனா

**சேயவனே மாவொண் டெருளரதீ தாவரதா**
**தாயனையாய் தூவின் சருவரர்தாழ் தாய்துணையே**
**தேயமுளோய் பாவின் றெரியலதீ சாபரமா**
**கோயிலுளோய் கூவுங் குருகிலகோர் மாதுகிலோய்.**

சேய்அவனே மா ஒண் தெருளர் அதீதா வரதா
தாய் அனையாய் தூவின் சருவரர் தாழ்தாய் துணையே
தேயம் உளோய் பாவின் தெரியல் அதீசா பரமா
கோயில் உளோய் கூவும் குருகு இலகு ஓர் மாதுகிலோய்.

செவ்வேளே! மாட்சிமையும் ஒளியும் உடைய அறிஞருக்கும் எட்டாதவனே! வரம் அருள்பவனே! தாய் போன்றவனே! தூய இனிய அவியுணவு கொள்ளும் தேவர்கள் வணங்கும் தாயின் துணைவனே! தேகம் உள்ளவனே! பாமாலை சூட்டுவோரது பரமேசா! பரமனே! திருக்கோயிலில் உள்ளவனே! கூவுகின்ற கோழி விளங்கும் ஒப்பற்ற பெரிய கொடியுடையவனே! 47

**தேசுருவா வேதன் செயல்புரிதே வாவிமலா**
**தாசரணா நீதந் தயவுளர்தா தாநிபுணா**
**தேசமனா காதுஞ் செயமுனிசே யேகழலோய்**
**கோசிகனே போதங் குயினிசபோ தாகுழையோய்.**

*தேசு உருவா வேதன் செயல்புரி தேவா விமலா*
*தாசர் அணா நீதம் தயவுஉளர் தாதா நிபுணா*
*தேசமனா காதும் செயமுனி சேயே கழலோய்*
*கோசிகனே போதம் குயில் நிசபோதா குழையோய்.*

ஒளி வடிவானவனே! பிரமதேவனுடைய படைப்புத் தொழிலைச் செய்த கடவுளே! மலமற்றவனே! அடியார்தம் தலைவா! நீதியும் கருணையும் உள்ளவரின் தந்தையே! மிக வல்லுநனே! நாடுகளுக்கு அரசே! வகுக்கும் செயமுனிவனின் புதல்வனே! தண்டை அணிந்தவனே! பட்டு உடுத்தவனே! ஞானத்தை உபதேசம் செய்யும் உண்மையான ஞானாசிரியனே! காதணி அணிந்தவனே! 48

**சீலமுளோய் காலஞ் செடிதபுகா லாசிவனே**
**சாலமுளோய் வாலஞ் சடுவரிவாழ் வேசதுரா**
**சீலரணா லாலுஞ் செடிநகையா ளீதிதியோய்**
**கோலமுளோய் சீலங் கொடுகொடுசீர் வாகுதியே.**

*சீலம் உளோய் காலம் செடிதபு காலா சிவனே*
*சாலம் உளோய் வால்அம் சடுஅரி வாழ்வேசதுரா*
*சீலர் அணால் ஆலும் செடிநகை ஆளீ திதியோய்*
*கோலம் உளோய் சீலம் கொடு கொடு சீர் வாகுதியே.*

அழகு உள்ளவனே! காலத்தையும் குற்றத்தையும் அழிக்கும் காலமே! சிவனே! இந்திரசால வித்தை காட்டுவோனே! தூய அழகிய ஆறு தீச்சுடரான வாழ்வே! அறிஞனே! நற்குண

முடையோர் தலைவனே! நிறைந்த குற்றத்தை ஒழிக்கும் ஆண்டவனே! காப்பவனே! அழகிய திருத்தோள்கள் உடையவனே! எனக்கு நற்குணத்தை விரைவாகக் கொடுத்தருள்வாயாக! 49

## 5. கலிவிருத்தம்

16. தானந் தனதன தானா தனனா

**மாவொண் டெருளர தீதா வரதா**
**தூவின் சருவரர் தாழ்தாய் துணையே**
**பாவின் றெரியல தீசா பரமா**
**கூவுங் குருகில கோர்மா துகிலோய்.**

*மாஒண் தெருளர் அதீதா வரதா*
*தூவின் சருவரர் தாழ் தாய் துணையே*
*பாவின் தெரியல்அதிஈசா பரமா*
*கூவும் குருகு இலகுஓர் மாதுகிலோய்.*

மாட்சியும் ஒளியும் உடைய அறிஞர்க்கும் எட்டாதவனே! வரம் அருள்பவனே! தூய அவியுணவு உண்ணும் தேவர்கள் வணங்கும் அன்னையின் துணைவனே! பாமாலை சூட்டுவோரின் பரமேசா! கூவும் கோழி விளங்கும் ஒப்பற்ற பெரிய கொடியை உடையவனே! 50

**வேதன் செயல்புரி தேவா விமலா**
**நீதந் தயவுளர் தாதா நிபுணா**
**காதுஞ் செயமுனி சேயே கழலோய்**
**போதங் குயினிச போதா குழையோய்.**

*வேதன் செயல்புரி தேவா விமலா*
*நீதம் தயவுஉளர் தாதா நிபுணா*
*காதும் செயமுனி சேயே கழலோய்*
*போதம் குயில்நிச போதா குழையோய்.*

பிரமதேவனின் படைப்புத் தொழிலைச் செய்யும் கடவுளே! மலம் அற்றவனே! நீதியும் கருணையும் உடைய தந்தையே! மிக

வல்லுநனே! வகுக்கும் செயமுனிவனின் புதல்வனே! தண்டை அணிந்தவனே! ஞானத்தை உபதேசிக்கும் உண்மையான ஞானாசிரியனே! காதணி அணிந்தவனே! 51

**காலஞ் செடிதபு காலா சிவனே**
**வாலஞ் சடுவரி வாழ்வே சதுரா**
**ஆலுஞ் செடிநகை யாளீ திதியோய்**
**சீலங் கொடுகொடு சீர்வா குதியே.**

*காலம் செடி தபு காலா சிவனே*
*வால் அம் சடு அரி வாழ்வே சதுரா*
*ஆலும் செடி நகை ஆளீ திதியோய்*
*சீலம் கொடுகொடு சீர் வாகுதியே.*

காலத்தையும் குற்றத்தையும் அழிக்கும் திருவடி உடையவனே! சிவனே! தூய அழகிய ஆறு ஒளியான வாழ்வே! அறிஞனே! நிறைந்த குற்றத்தை ஒழிக்கும் ஆண்டவனே! காப்பவனே! அழகிய தோள்கள் உடையவனே! நற்குணத்தை விரைவாகக் கொடுத்தருள்வாயாக! 52

**போர்வெஞ் சிலைவகிர் சேடா பொருநா**
**சார்திண் டலைமையர் மீளீ சனதா**
**சீர்வண் டிலகவு லாசா திமிசோய்**
**ஆர்வங் குலைமருள் கோலா வனகா.**

*போர் வெம் சிலைவகிர் சேடா பொருநா*
*சார் திண் தலைமையர் மீளீ சனதா*
*சீர் வண் திலக உலாசா திமிசோய்*
*ஆர்வம் குலைமருள் கோலா அனகா.*

போர்த் தொழிலில் வல்ல கொடிய கிரௌஞ்ச மலையைப் பிளந்த இளையோனே! வீரனே! சார்புள்ள உறுதியான தலைமையரின் அரசனே! மக்கள் வடிவு ஆனவனே! அழகும் வளமையும் உடைய மேலான உள்ளத்துக் கிளர்ச்சியுடையவனே! வேங்கை மரம் ஆனவனே! ஆசை, மயக்கத்தை ஒழிக்கும் தண்டாயுதபாணியே! தூயவனே! 53

17. தனதன தனதன தானதனா தானதனா

**திடமுடை மயில்வரு சேவகனே தேமுதலே**
**தடநில வயவறு தாரகனே சாமிசதா**
**திடகுக செயிரறு சீடர்கணா சமமுதால்**
**குடமுனி வியனிலை கூறரசே கோமுருகே.**

திடம் உடை மயில்வரு சேவகனே தேமுதலே
தடநில வயவு அறு தாரகனே சாமி சதா
திடகுக செயிர் அறு சீடர்கள் நாச ஏம முதால்
குடமுனி வியன்நிலை கூறு அரசே கோமுருகே.

வலிமையுடைய மயில் வாகனத்தின்மீது ஏறிவரும் வீரனே! இனிய முதல்வனே! எப்போதும் பெரிய மண்ணுலக ஆசையை அறுக்கும் பிரணவனே! ஞானாசிரியனே! வலிமையான குகப் பெருமானே! குற்றமற்ற அடியார்களின் தலைவனே! அரணான முதல்வனே! அகத்திய முனிவர்க்கு மேலான நிலையை உபதேசித்த அரசே! அரசனான அழகே! 54

**சிறுமையில் பிரதம சேகரனே சேதனனே**
**தறுகணர் கருதலர் சார்பிலனே சாதபதீ**
**சிறுகறு மருமறை தேடிறையே தீதடுகோ**
**குறமகள் சுரமகள் கூடருளோய் கோதிலியே.**

சிறுமைஇல் பிரதம சேகரனே சேதனனே
தறுகணர் கருதலர் சார்பு இலனே சாதபதீ
சிறுகு அறும் அருமறை தேடு இறையே தீது அடுகோ
குறமகள் சுரமகள் கூடு அருளோய் கோது இலியே.

துன்பம் இல்லாத முதன்மையான திருமுடி உடையவனே! அறிஞனே! குரூரமானவர் உன்னை நினையாத பகைவர் சார்பு இல்லாதவனே! மெய்த்தலைவனே! குறைவு அற்ற அரிய வேதங்களைத் தேடுகின்ற இறைவனே! தீமையை அழிக்கும் அரசனே! குறமகளான வள்ளியம்மை, தேவமகளான தெய்வயானை ஆகிய இருவரையும் மணந்த அருளாளனே! குற்றமில்லாதவனே! 55

18. தனதன தனதன தானதனானா தனனா

**சிவகண பதியிளை யோய்திணியாதீ விரவேள்**
**சவணர்கண் முதியர்கள் சார்புளனேசா விலியே**
**சிவைசுத நதிசுத தேமமுதேசீ வனியே**
**குவிபகை மதியினர் கோளரியேகோ வணனே.**

*சிவகணபதி இளையோய் திணியா தீவிரவேள்*
*சவணர்கள் முதியர்கள் சார்புளனே சாவு இலியே*
*சிவை சுத நதி சுத தேமமுதே சீவனியே*
*குவிபகை மதியினர் கோள் அரியே கோவணனே.*

சிவமாகிய கணபதியின் தம்பியே! திண்மையனே! கோபமுடையவனே! புண்ணிய சீலர்களும் கற்றவர்களும் ஆகியோர் பக்கம் சார்ந்துள்ளவனே! இறப்பு இல்லாதவனே! உமையம்மையின் மைந்தனே! கங்கை நதியின் புதல்வனே! இனிய அமுதே! சஞ்சீவியே! திரண்ட பகைப் புத்தியினர்க்குச் சிங்கமே! திருக்கோவணம் அணிந்தவனே! 56

**சிகிவரை யொலிமுனி தேசிகனேசார் முனியே**
**தகைகெழு புலிமுனி தாழ்பெரியோய்சேர் கரனே**
**திகில்வெலும் வலியருள் சீறடிதாகூர் மதியோய்**
**குகையுரு மலைவளர் கோமகனேசீர் முருகா.**

*சிகிவரை ஒலிமுனி தேசிகனே சார் முனியே*
*தகைகெழு புலிமுனி தாழ் பெரியோய்சேர்கரனே*
*திகில்வெலும் வலி அருள் சீறடிதா கூர் மதியோய்*
*குகை உரு மலைவளர் கோமகனே சீர் முருகா.*

அருணகிரிநாதர் ஆன சந்தமுனியின் ஞானாசிரியனே! சார்ந்திருக்கும் முனிவனே! பெருமை பொருந்திய புலிக்கால் முனிவர் வணங்கும் பெரியோனே! சேரும் திருக்கையனே! கூர்மையான அறிவுடையவனே! அச்சத்தை வெல்லும் வழியை அருளும் உன் சிறிய திருவடிகளைத் தந்தருள்வாயாக! குகை போன்ற வடிவம் அமைந்த மலையில் எழுந்தருளியுள்ள அரசனே! அழகிய முருகனே! 57

19. தானதனா தானந் தனதன தானா

**சேயவனே மாவொண் டெருளர தீதா**
**தாயனையாய் தூவின் சருவரர் தாழ்தாய்**
**தேயமுளோய் பாவின் றெரியல தீசா**
**கோயிலுளோய் கூவுங் குருகில கோர்மா.**

சேய்அவனே மாஒண் தெருளர் அதீதா
தாய் அனையாய் தூவின் சருவரர் தாழ்தாய்
தேயம் உளோய் பாவின் தெரியல் அதீசா
கோயில் உளோய் கூவும் குருகு இலகு ஓர்மா.

செவ்வேளே! மாட்சியும் ஒளியும் உடைய அறிஞர்க்கும் எட்டாதவனே! தாய் போன்றவனே! தூய அவியுணவு உண்ணும் தேவர்கள் வணங்கும் தாயே! உடம்பு உடையவனே! பாமாலை சூட்டுவோரின் பரமேசா! கோயில்களில் உள்ளவனே! கூவும் கோழிக்கொடி விளங்கும் ஒப்பற்ற அழகனே! 58

**தேசுருவா வேதன் செயல்புரி தேவா**
**தாசரணா நீதந் தயவுளர் தாதா**
**தேசமனா காதுஞ் செயமுனி சேயே**
**கோசிகனே போதங் குயினிச போதா.**

தேசுஉருவா வேதன் செயல்புரி தேவா
தாசர் அணா நீதம்தயவு உளர் தாதா
தேசமனா காதும் செய முனி சேயே
கோசிகனே போதம் குயில்நிச போதா.

ஒளி உருவனே! பிரமதேவன் படைப்புத் தொழிலைச் செய்யும் கடவுளே! அடியார் தம் தலைவனே! நீதியும் கருணையும் உள்ளவரின் தந்தையே! நாடுகளின் அரசனே! வகுக்கும் செய முனியின் புதல்வனே! பட்டு உடுத்தவனே! ஞானத்தை உபதேசம் செய்யும் உண்மையான ஞானாசிரியனே! 59

**சீலமுளோய் காலஞ் செடிதபு காலா**
**சாலமுளோய் வாலஞ் சடுவரி வாழ்வே**
**சீலரணா லாலுஞ் செடிநகை யாளீ**
**கோலமுளோய் சீலங் கொடுகொடு சீர்வா.**

சீலம் உளோய் காலம் செடி தபு காலா
சாலம் உளோய் வால் அம் சடு அரி வாழ்வே
சீலர் அணால் ஆலும் செடிநகை ஆளீ
கோலம் உளோய் சீலம் கொடு கொடு சீர்வா.

அருட்குணம் உள்ளவனே! காலத்தையும் குற்றத்தையும் ஒழிக்கும் காலமே! சாலவித்தை உள்ளவனே! தூய அழகிய ஆறு தீப்பொறியான வாழ்வே! நற்குணமுடையவரின் தலைவனே! நிறைந்த குற்றத்தை ஒழிக்கும் ஆண்டவனே! நற்குணத்தை விரைந்து கொடுப்பாயாக! அழகே வருக! 60

**தேகமுளோய் போர்வெஞ் சிலைவகிர் சேடா**
**சாகரமே சார்திண் டலைமையர் மீளீ**
**சேகரனே சீர்வண் டிலகவு லாசா**
**கோகருள்கோ னார்வங் குலைமருள் கோலா.**

தேகம்உளோய் போர்வெம் சிலை வகிர் சேடா
சாகரமே சார் திண் தலைமையர் மீளீ
சேகரனே சீர்வண் திலக உலாசா
கோகுஅருள் கோன் ஆர்வம் குலைமருள் கோலா.

போர்த் தொழில் வல்ல கொடிய கிரௌஞ்சத்தைப் பிளந்த இளையோனே! கடலே! சாரும் உறுதியான தலைமையர்தம் அரசனே! அழகனே! அழகும் வளமையும் கொண்ட மேலான உள்ள மகிழ்ச்சியுடையவனே! கழுதைக்கும் அருள்புரிந்த அரசனே! அன்பினால் மயக்கத்தை ஒழிக்கும் தண்டபாணியே! 61

20. தனனா தனனா தனனா தனனா

**திருவே பரிவே செனியா தவனே**
**சருவே சுரனே தனிவா னவனே**
**திருமான் மருகா தினைமா வுணியே**
**குருசூழ் குமரா குனிசா னகனே.**

திருவே பரிவே செனியாதவனே
சருவேசுரனே தனிவானவனே
திருமால் மருகா தினைமா உணியே
குருசூழ் முருகா குனிசானகனே.

செல்வமே! அன்பே! பிறவாதவனே! சருவேசுரனே! ஒப்பற்ற தேவனே! திருமால் மருமகனே! தினை மாவை உண்பவனே! ஒளி சூழ்ந்த முருகனே! வளைந்த விற்படையுடையவனே! 62

**செழுமா மணியே திருசூ லதரா**
**தழன்மா மகனே சருவா பரணா**
**செழியோ னிறைவா திருநீ றணிவோய்**
**குழுகா புலவா குரவார் புயனே.**

*செழுமாமணியே திரிசூல்அதரா*
*தழல் மாமகனே சருவஆபரணா*
*செழியோன் இறைவா திருநீறு அணிவோய்*
*குழகா புலவா குரவு ஆர் புயனே.*

செழுமையும் அழகும் பொருந்திய மாணிக்கமே! முத்தலைச் சூலத்தைப் பிடித்தவனே! கார்த்திகை மாதர் அறுவரின் சிறந்த மகனே! எல்லா ஆபரணமும் அணிந்தவனே! பாண்டிய அரசனின் இறைவனே! திருநீறு திருமேனியில் அணிபவனே! இளையோனே! புலவனே! குரா மலர் அணிந்த திருத்தோள்களுடையவனே! 63

## 6. கலிநிலைத்துறை

21. தனனா தனனா தனதன தனதன தானதனா

**திருவே பரிவே திடமுடை மயில்வரு சேவகனே**
**சருவே சுரனே தடநில வயவறு தாரகனே**
**திருமான் மருகா திடகுக செயிரறு சீடர்கணா**
**குருசூழ் குமரா குடமுனி வியனிலை கூறரசே.**

*திருவே பரிவே திடம் உடை மயில் வரு சேவகனே*
*சருவேசுரனே தடநிலவயவு அறு தாரகனே*
*திருமால் மருகா திட குக செயிர் அறு சீடர்கணா*
*குருசூழ் குமரா குடமுனி வியன்நிலை கூறு அரசே.*

செல்வமே! அன்பே! வலிமையுடைய மயில் வாகனம்மீது வரும் வீரனே! சருவேசுரனே! பெரிய மண்ணுலக ஆசையை

அறுக்கும் பிரணவனே! திருமால் மருமகனே! வலிமையான குகனே! குற்றம் அற்ற அடியாரின் ஞானக் கண்ணே! ஒளி சூழ்ந்த குமரா! அகத்திய முனிவர்க்கு மேலான நிலையை உபதேசித்த அரசனே! 64

**செனியா தவனே சிறுமையில் பிரதம சேகரனே**
**தனிவா னவனே தறுகணர் கருதலர் சார்பிலனே**
**தினைமா வுணியே சிறுகறு மருமறை தேடிறையே**
**குனிசா னகனே குறமகள் சுரமகள் கூடருளோய்.**

*செனியாதவனே சிறுமை இல் பிரதம சேகரனே*
*தனிவானவனே தறுகணர் கருதலர் சார்புஇலனே*
*தினைமா உணியே சிறுகு அறும் அருமறை தேடு இறையே*
*குனிசானகனே குறமகள் சுரமகள் கூடு அருளோய்.*

பிறவாதவனே! துன்பமில்லாத முதன்மையான திருமுகம் உடையவனே! ஒப்பற்ற தேவனே! குரூரமானவர், உன்னை நினையாத பகைவர் சார்பில்லாதவனே! தினை மாவை உண்பவனே! குற்றம் அற்ற அரிய வேதங்கள் தேடுகின்ற இறைவனே! வளையும் விற்படையுடையவனே! குறமகளான வள்ளியம்மையையும் தேவமகளான தெய்வானையையும் மணந்த அருள் உடையவனே! 65

**செழுமா மணியே சிவகண பதியிளை யோய் திணியா**
**தழன்மா மகனே சவணர்கண் முதியர்கள் சார்புளனே**
**செழியோ னிறைவா சிவைசுத நதிசுத தேமமுதே**
**குழகா புலவா குவிபகை மதியினர் கோளரியே.**

*செழுமாமணியே சிவகணபதி இளையோய் திணியா*
*தழல் மாமகனே சவணர்கள் முதியர்கள் சார்பு உளனே*
*செழியோன் இறைவா சிவைசுத நதிசுத தேம் அமுதே*
*குழகா புலவா குவிபகை மதியினர் கோள்அரியே.*

செழுமையும் அழகும் உடைய மாணிக்கமே! சிவமாகிய கணபதியின் தம்பியே! திண்மையனே! கார்த்திகை மாதர் அறுவர் தம் சிறந்த மகனே! புண்ணிய சீலர் கற்றவர் தம் சார்பில் உள்ளவனே! பாண்டிய அரசனின் இறைவனே! உமையம்மையின்

மைந்தனே! கங்கை நதியின் புதல்வனே! இனிய அமுதமே! இளையோனே! புலவனே! திரண்ட பகைப் புத்தியினர்க்குச் சிங்கமே! 66

**திரிசூ லதரா சிகிவரை யொலிமுனி தேசிகனே**
**சருவா பரணா தகைகெழு புலிமுனி தாழ்பெரியோய்**
**திருநீ றணிவோய் திகில்வெலும் வலியருள் சீறடிதா**
**குரவார் புயனே குகையுரு மலைவளர் கோமகனே.**

திரிசூல்அதரா சிகிவரை ஒலி முனி தேசிகனே
சருவ ஆபரணா தகைகெழு புலி முனி தாழ் பெரியோய்
திருநீறு அணிவோய் திகில் வெலும் வலி அருள் சீறடி தா
குரவு ஆர் புயனே குகை உரு மலைவளர் கோமகனே.

முத்தலைச் சூலாயுதம் பிடித்தவனே! அருணகிரிநாதர் ஆன சந்த முனியின் ஞானாசிரியனே! எல்லா அணிகலன்களையும் அணிந்தவனே! பெருமை பொருந்திய புலிக்கால் முனிவர் வணங்கும் பெரியோனே! திருநீறு அணிவோனே! அச்சத்தை வெல்லும் வலிமை அருளும் சிறிய திருவடிகள் உடையவனே! குரா மலர் மாலை அணியும் திருத்தோளனே! குகை உருவான மலையில் எழுந்தருளியுள்ள அரசனே! 67

22. தனதன தானா தனனா தனனா தனனா

**தெருளர தீதா வரதா திருவே பரிவே**
**சருவரர் தாழ்தாய் துணையே சருவே சுரனே**
**தெரியல தீசா பரமா திருமான் மருகா**
**குருகில கோர்மா துகிலோய் குருசூழ் குமரா.**

தெருளர் அதீதா வரதா திருவே பரிவே
சருவரர் தாழ்தாய் துணையே சருவேசுரனே
தெரியல் அதீசா பரமா திருமால் மருகா
குருகு இலகு ஓர் மாதுகிலோய் குரு சூழ் குமரா.

அறிஞர்க்கும் எட்டாதவனே! வரமளிப்பவனே! செல்வமே! அன்பே! அவியுணவு உண்ணும் தேவர்கள் வணங்கும் அன்னையின் துணைவனே! சருவேசுரனே! மாலை அணிந்த

பரமேசா! பரமா! திருமால் மருமகனே! கோழி விளங்கும் ஒப்பற்ற பெரிய கொடியுடையவனே! ஒளி சூழ்ந்த குமரனே! 68

**செயல்புரி தேவா விமலா செனியா தவனே**
**தயவுளர் தாதா நிபுணா தனிவா னவனே**
**செயமுனி சேயே கழலோய் தினைமா வுணியே**
**குயினிச போதா குழையோய் குனிசா னகனே.**

*செயல்புரி தேவா விமலா செனியாதவனே*
*தயவு உளர் தாதா நிபுணா தனிவானவனே*
*செய முனி சேயே கழலோய் தினைமா உணியே*
*குயில் நிச போதா குழையோய் குனி சானகனே.*

செயல் செய்யும் கடவுளே! மலமற்றவனே! பிறவாதவனே! கருணை உள்ளவர் தந்தையே! மிக வல்லோனே! ஒப்பற்ற தேவனே! செயமுனி சேயே! தண்டை அணிந்தவனே! தினை மாவை உண்போனே! உபதேசம் செய்யும் மெய்ஞ்ஞானியே! காதணி உடையவனே! வளையும் விற்படையோனே! 69

**செடிதபு காலா சிவனே செழுமா மணியே**
**சடுவரி வாழ்வே சதுரா தழன்மா மகனே**
**செடிநகை யாளீ திதியோய் செழியோ னிறைவா**
**கொடுகொடு சீர்வா குதியே குழகா புலவா.**

*செடி தபு காலா சிவனே செழுமா மணியே*
*சடு அரி வாழ்வே சதுரா தழல் மா மகனே*
*செடிநகை ஆளீ திதியோய் செழியோன் இறைவா*
*கொடு கொடு சீர் வாகுதியே குழகா புலவா.*

பாவத்தைப் போக்கும் திருவடியுடையவனே! சிவனே! செழுமையும் அழகும் உடைய மாணிக்கமே! ஆறு தீப்பொறிகளான வாழ்வே! அறிஞனே! கார்த்திகை மாதர்தம் சிறந்த மகனே! குற்றத்தை ஒழிக்கும் ஆண்டவனே! காப்பவனே! பாண்டியவரசனின் கடவுளே! அழகிய திருத்தோள்களையுடையவனே! விரைவாகக் கொடுப்பாயாக! இளையோனே! புலவனே! 70

**சிலைவகிர் சேடா பொருநா திரிசூ லதரா**
**தலைமையர் மீளீ சனதா சருவா பரணா**
**திலகவு லாசா திமிசோய் திருநீ றணிவோய்**
**குலைமருள் கோலா வனகா குரவார் புயனே.**

*சிலைவகிர் சேடா பொருநா திரி சூல்அதரா*
*தலைமையர் மீளீ அனதா சருவ ஆபரணா*
*திலக உலாசா திமிசோய் திருநீறு அணிவோய்*
*குலைமருள் கோலா அனகா குரவு ஆர் புயனே.*

கிரௌஞ்ச மலையைப் பிளந்த இளையோனே! வீரனே! முத்தலைச் சூலாயுதம் பிடித்தவனே! தலைமயர் அரசனே! மக்கள் வடிவுடையவனே! எல்லா அணிகலன்களும் அணிந்தவனே! மேலான உள்ள மகிழ்ச்சியுடையோனே! வேங்கை மரம் ஆனவனே! திருநீறு அணிவோனே! மயக்கத்தை ஒழிக்கும் தண்டபாணியே! தூயவனே! குரா மலர் மாலை அணிந்த திருத் தோள்களுடையவனே! 71

23. தானன தானா தந்தன தனனா தானதனா

**தேகமு ளோய்போர் வெஞ்சிலை வகிர்சே டாபொருநா**
**சாகர மேசார் திண்டலை மையர்மீ ளீசனதா**
**சேகர னேசீர் வண்டில கவுலா சாதிமிசோய்**
**கோகருள் கோனார் வங்குலை மருள்கோ லாவனகா.**

*தேகம் உளோய் போர் வெம் சிலை வகிர் சேடா பொருநா*
*சாகரமே சார் திண்தலைமயர் மீளீ சனதா*
*சேகரனே சீர் வண் திலக உலாசா திமிசோய்*
*கோகு அருள் கோன் ஆர்வம் குலை மருள் கோலா அனகா.*

உடம்புடையவனே! போர்த் தொழில்வல்ல கொடிய கிரௌஞ்ச மலையைப் பிளந்த இளையோனே! கடலே! சார்ந்துள்ள உறுதியான தலைமையர் அரசனே! மக்கள் வடிவே! அழகனே! அழகும் வளமையும் மேலான உள்ள மாட்சிமையுடையோனே! வேங்கை மரம் ஆனவனே! கழுதைக்கும் அருள்புரிந்த அரசனே! ஆசை மயக்கம் ஒழிக்கும் தண்டபாணியே! தூயவனே! 72

24. தனதன தானன தானன தானன தானதனா

**திகழ்மறை பாடிடு தேமுத லேயதி தீரமுளோய்**
**சகவுயிர் நாடக சாமிச தாசிவ தாரணிவோய்**
**சிகலறு பாடகர் சேமமு தாலுயர் தேரமர்வோய்**
**குகைதொறு மாடிடு கோமுரு கேயிடர் கூரமிலோய்.**

*திகழ் மறை பாடிடு தே முதலே அதி தீரம் உளோய்*
*சகஉயிர் நாடக சாமி சதா சிவ தார் அணிவோய்*
*சிகல் அறு பாடகர் சேம முதால் உயர் தேர் அமர்வோய்*
*குகைதொறும் ஆடிடு கோ முருகே இடர் கூரம் இலோய்.*

விளங்கும் வேதங்கள் பாடிடும் இனிய முதல்வனே! மிக்க தைரியம் உள்ளவனே! உலக உயிர்களிடம் ஐந்தொழில் நாடகம் செய்யும் ஞானாசிரியனே! சதாசிவனே! மாலை அணிவோனே! குற்றம் அற்ற பாடகரின் அரணாக உள்ள முதல்வனே! உயர்ந்த தேரின்மீது அமர்வோனே! உயிர்களின் உள்ளக் குகைதோறும் நடம் செய்யும் அரசனே! அழகே! துன்பமும் கொடுமையும் இல்லாதவனே! 73

**சிலைவலர் சீயம் தீவிர வேண்மணி சேரணியோய்**
**சலமறு தூயவ சாவிலி யேமிகு சாரியனே**
**சிலதர்க ணாயக சீவனி யேதுதி தேரதுலா**
**குலமிலி மாயமில் கோவண னேயிழி கோரமிலோய்.**

*சிலைவலர் சீயம் அதீவிரவேள் மணி சேர் அணியோய்*
*சலம் அறு தூயவ சாவு இலியே மிகு சாரியனே*
*சிலதர்கள் நாயக சீவனியே துதிதேர் அதுலா*
*குலம் இலி மாயம் இல் கோவணனே இழி கோரம் இலோய்.*

வில்வீரர்க்கு முன் சிங்கமே! மிகு கோபம் கொள்ளும் செவ்வேளே! உருத்திராக்கமணி சேர்ந்த மாலையை அணிவோனே! பொய்யற்ற தூயவனே! இறப்பு இல்லாதவனே! வலம் இடமென மிகுசாரி வருவோனே! அடியார்களின் தலைவனே! சஞ்சீவியே! துதிக்கும் தேரில் வரும் ஒப்பில்லாதவனே! குலம் இல்லாதவனே! பொய் இல்லாத கோவணம் உடையவனே! கீழான அச்சம் இல்லாதவனே! 74

25. தானன தானன தானன தானன தானதனா

**சீர்முரு காவடர் சேனைய னேயொளிர் சேயவனே**
**சார்முனி யேகிளர் தானைய னேநல தாயனையாய்**
**சேர்கர னேநிறை தேனைய னேகமழ் தேயமுளோய்**
**கூர்மதி யோயொரு கோனைய னேபல கோயிலுளோய்.**

*சீர்முருகா அடர் சேனையனே ஒளிர் சேய்அவனே*
*சார் முனியே கிளர் தானையனே நலதாய் அனையாய்*
*சேர்கரனே நிறை தேன் ஐயனே கமழ் தேயம் உளோய்*
*கூர்மதியோய் ஒரு கோன் ஐயனே பல கோயில் உளோய்.*

அழகிய முருகனே! பொருதவல்ல படையுடையவனே! ஒளிவீசும் செவ்வேட்பரமனே. சாரும் முனிவனே! எழுச்சியுடைய படையுடையவனே! நல்ல தாய் போன்றவனே! சேர்ந்த திருக்கையனே! முழு இன்பமான இனிய தலைவனே! மணம் வீசும் தேகம் உள்ளவனே! கூர்மையான அறிவுடையவனே! ஓர் அரசனின் தலைவனே! பல கோயில்களில் உள்ளவனே! 75

**சேதன னேசுக தீபக மேயறு சீலமுளோய்**
**சாதப தீயொரு தாபமி லோய்விரி சாலமுளோய்**
**தீதடு கோபர சீபதி யேபுகழ் சீலரணால்**
**கோதிலி யேநிமிர் கோபதி யேயெணில் கோலமுள்ளோய்.**

*சேதனனே சுகதீபகமே அறு சீலம் உளோய்*
*சாதபதீ ஒரு தாபம் இலோய் விரி சாலம் உளோய்*
*தீது அடுகோ பர சீபதியே புகழ் சீலர் அணால்*
*கோது இலியே நிமிர் கோபதியே எணில் கோலம் உளோய்.*

அறிஞனே! இன்ப விளக்கே! ஆறு குணங்கள் உள்ளவனே! மெய்த்தலைவனே! ஒரு துன்பமும் இல்லாதவனே! பரந்த இந்திரசால வித்தை உள்ளவனே! தீமையை ஒழிக்கும் அரசனே! மேலான பார்வதியம்மையின் தலைவனே! புகழ்கின்ற குணமுடையவரின் தலைவனே! குற்றம் இல்லாதவனே! நிமிர்ந்த எண்ணில்லா மூர்த்தங்கள் ஆக உள்ளவனே! 76

26. தான தனாதன தான தனாதன தானதனா

**தீவி ரவேண்மணி சேர ணியோயுயர் தேகமுளோய்**
**சாவி லியேமிகு சாரிய னேகுண சாகரமே**
**சீவ னியேதுதி தேர துலாவறு சேகரனே**
**கோவ ணனேயிழி கோர மிலோயொரு கோகருள்கோன்**

*தீவிரவேள் மணி சேர் அணியோய் உயர் தேகம் உளோய்*
*சாவு இலியே மிகுசாரியனே குணசாகரமே*
*சீவன்இயே துதி தேர் அதுலா அறு சேகரனே*
*கோவணனே இழிகோரம் இலோய் ஒரு கோகு அருள்கோன்.*

பெருங்கோபம் உடைய செவ்வேளே! உருத்திராக்க மணிமாலையை அணிகலமாய் உடையவனே! மகாவிசுவரூப தேகம் உள்ளவனே! இறப்பு இல்லாதவனே! வலம் இடம் என மிக்க சாரி வருவோனே! குணக்கடலே! சஞ்சீவியே! துதிக்கும் தேருடைய ஒப்பில்லாதவனே! ஆறு திருமுடி உடையவனே! திருக்கோவணம் உடையவனே! கீழான அச்சம் இல்லாதவனே! ஒரு கழுதைக்கும் அருள்புரிந்த அரசனே! 77

## 7. கட்டளைக் கலித்துறை

27. தனதன தானன தான தனாதன தானதனா

**திருமலி தாரணி சீர்மு ருகாவடர் சேனையனே**
**தருமமெ யாரணர் சார்மு னியேகிளர் தானையனே**
**செருமலி யாரயில் சேர்க ரனேநிறை தேனையனே**
**குருமலி நாரருள் கூர்ம தியோயொரு கோனையனே.**

*திருமலி தார் அணி சீர்முருகா அடர் சேனையனே*
*தரும மெய் ஆரணர் சார் முனியே கிளர் தானையனே*
*செருமலி ஆர் அயில் சேர்கரனே நிறைதேன் ஐயனே*
*குருமலி நாரர் உள் கூர்மதியோய் ஒரு கோன் ஐயனே.*

அழகுமிக்க கிண்கிணி அணிந்த அழகிய முருகப்பெருமானே! பொருதும் படையுடையவனே! அறமும் உண்மையுமுள்ள

வேதியரைச் சாரும் முனியே! ஒளிவீசும் படைக்கலம் உடையவனே! போர்மிகு கூரிய வேல் தாங்கிய திருக்கரம் உடையவனே! முழு இன்பமான தலைவனே! மேலான அன்பர் நினைக்கும் கூர்மையான அறிவுடையவனே! ஒரு அரசனின் தலைவனே! 78

**சிதலையின் மாசுரர் சேத னனேசுக தீபகமே**
**சதமுனை வாசவர் சாத பதீயொரு தாபமிலோய்**
**சிதடுறு பாசகர் தீத டுகோபர சீபதியே**
**குதலையென் மாசுகொல் கோதி லியேநிமிர் கோபதியே.**

*சிதலைஇல் மாசுரர் சேதனனே சுகதீபகமே*
*சதமுனை வாசவர் சாதபதீ ஒரு தாபம் இலோய்*
*சிதடுஉறுஉ பாசகர் தீது அடுகோ பர சீபதியே*
*குதலை என் மாசுகொல் கோதுஇலியே நிமிர் கோ பதியே.*

துன்பம் இல்லாத பெரிய தேவர்களின் ஞானாசிரியனே! இன்ப விளக்கே! வச்சிராயுதம் உடைய இந்திரனின் மெய்த்தலைவனே! ஒரு துன்பமும் இல்லாதவனே! அறியாமை கொண்டுள்ள சீடர்களின் தீச்செயல்களை ஒழிக்கும் அரசனே! மேலான பார்வதியம்மையின் தலைவனே! அறிவிலா என் குற்றத்தை ஒழிக்கும் குற்றமற்றவனே! உயர்ந்த இந்திரனே! 79

28. தான தனாதன தானன தானன தானதனா

**தேமு தலேயதி தீரமு ளோயறு தேசுருவா**
**சாமி சதாசிவ தாரணி வோய்தொழு தாசரணா**
**சேம முதாலுயர் தேரமர் வோய்பல தேசமனா**
**கோமு ருகேயிடர் கூரமி லோய்சுடர் கோசிகனே.**

*தேமுதலே அதிதீரம் உளோய் அறு தேசு உருவா*
*சாமி சதாசிவ தார் அணிவோய் தொழுதாசர் அணா*
*சேம முதால் உயர் தேர் அமர்வோய் பல தேசமனா*
*கோ முருகே இடர் கூரம் இலோய் சுடர் கோசிகனே.*

இனிய முதல்வனே! மிக்க தைரியம் உள்ளவனே! ஆறு ஒளிச் சுடர் கோசிகனே! சாமி! சதாசிவனே! மாலை அணிவோனே! வணங்கும் அடியார் தலைவனே! அரணாக உள்ள முதல்வனே! உயர்ந்த தேரில் அமர்வோனே! பல நாடுகளின் அரசனே! அரச

அழகே! துன்பமும் கொடுமையும் இல்லாதவனே! ஒளி வீசும் பட்டு உடை உடுத்தவனே! 80

## 8. நேரிசை வெண்பா

29. தானதனா தானந் தனனதனா தானதனா
தானதனா தானந் தனனதனா - தானதனா
தான தனா தானந் தன

**சேயவனே மாவொண் டெருளரதீ தாவரதா**
**தாயனையாய் தூவின் சருவரர்தாழ்—தாய்துணையே**
**தேயமுளோய் பாவின் றெரியலதீ சாபரமா**
**கோயிலுளோய் கூவுங் குரு.**

*சேயவனே மா ஒண் தெருளர் அதீதா வரதா*
*தாய் அனையாய் தூவின் சருவரர் தாழ் - தாய் துணையே*
*தேயம் உளோய் பாவின் தெரியல் அதீசா பரமா*
*கோயில் உளோய் கூவும் குரு.*

செவ்வேளே! மாட்சியும் ஒளியுமுடைய அறிஞர்க்கும் எட்டாதவனே! வரம் அருள்பவனே! தாய் போன்றவனே! தூய இனிய அவியுணவு உண்ணும் தேவர்கள் வணங்கும் தாயின் துணைவனே! உடம்புள்ளவனே! பாமாலை அணியும் பரமேசா! பரமனே! கோயிலில் உள்ளவனே! அழைக்கும் ஞானாசிரியனே! 81

## 9. இன்னிசை வெண்பா

30. தானதனா தானந் தனனதனா தானதனா
தான தனா தானந் தன

**தேசுருவா வேதன் செயல்புரிதே வாவிமலா**
**தாசரணா நீதந் தயவுளர்தா தாநிபுணா**
**தேசமனா காதுஞ் செயமுனிசே யேகழலோய்**
**கோசிகனே போதங் குயில்.**

*தேசு உருவா வேதன் செயல்புரி தேவா விமலா*
*தாசர் அணா நீதம் தயவு உளர் தாதா நிபுணா*
*தேச மனா காதும் செய முனி சேயே கழலோய்*
*கோசிகனே போதம் குயில்.*

ஒளிவடிவு ஆனவனே! பிரமதேவனின் படைப்புத் தொழிலைச் செய்யும் கடவுளே! மலமற்றவனே! அடியாரின் தலைவனே! நீதியும் கருணையும் உள்ளவர் தந்தையே! மிக வல்லவனே! நாட்டு அரசனே! வகுக்கும் செயமுனியின் சேயே! தண்டை அணிந்தவனே! பட்டு உடை உடுத்தவனே! ஞானத்தை உபதேசித்தருள்வாயாக. 82

**சீலமுளோய் காலஞ் செடிதபுகா லாசிவனே**
**சாலமுளோய் வாலஞ் சடுவரிவாழ் வேசதுரா**
**சீலரணா லாலுஞ் செடிநகையா ளீதிதியோய்**
**கோலமுளோய் சீலங் கொடு.**

*சீலம் உளோய் காலம் செடிதபு காலா சிவனே*
*சாலம் உளோய் வால் அம் சடு அரி வாழ்வே சதுரா*
*சீலர் அணால் ஆலும் செடிநகை ஆளீ திதியோய்*
*கோலம் உளோய் சீலம் கொடு.*

அருட்குணம் உள்ளோனே! காலத்தையும் பாவத்தையும் ஒழிக்கும் திருவடி உடையவனே! வடிவான வாழ்வே! சாலவித்தை உடையவனே! தூயதும் அழகியதும் ஆன ஆறு தீப்பொறிகளால் ஆன தலைவனே! நிறைந்த குற்றத்தை ஒழிக்கும் ஆண்டவனே! காப்பவனே! மூர்த்தமாய் உள்ளவனே! நற்குணத்தைக் கொடுத்தருள்வாயாக! 83

**தேகமுளோய் போர்வெஞ் சிலைவகிர்சே டாபொருநா**
**சாகரமே சார்திண் டலைமையர்மீ ளீசனதா**
**சேகரனே சீர்வண் டிலகவுலா சாதிமிசோய்**
**கோகருள்கோ னார்வங் குலை.**

*தேகம் உளோய் போர்வெம் சிலை வகிர் சேடாபொருநா*
*சாகரமே சார்திண் தலைமையர் மீளீ அனதா*
*சேகரனே சீர்வண் திலக உலாசா திமிசோய்*
*கோகு அருள் கோன் ஆர்வம் குலை.*

உடம்புள்ளவனே! போர்வல்ல கொடிய கிரெளஞ்ச மலையைப் பிளந்த இளையோனே! வீரனே! கடலே! சாரும் உறுதியான தலைமையர் அரசனே! மக்கள் வடிவே! முடிவுடையவனே! அழகும் வளமும் உள்ள மேலான உள்ள மகிழ்ச்சி உள்ளவனே! வேங்கை மரம் ஆனவனே! கழுதைக்கும் அருள்புரியும் அரசனே! என் ஆசையைக் கலைத்து விடுவாயாக! 84

## 10. நிலைமண்டில ஆசிரியப்பா

31. தனனா தனனா தனனா தனனா

**திருவே பரிவே செனியா தவனே**
**செழுமா மணியே திரிசூ லதரா**
**சருவே சுரனே தனிவா னவனே**
**தழன்மா மகனே சருவா பரணா**
**திருமான் மருகா தினைமா வுணியே**
**செழியோ னிறைவா திருநீ றணிவோய்**
**குருசூழ் குமரா குனிசா னகனே.**
**குழகா புலவா குரவார் புயனே.**

*திருவே பரிவே செனியாதவனே*
*செழுமா மணியே திரிசூலதரா*
*சருவேசுரனே தனிவானவனே*
*தழல் மாமகனே சருவ ஆபரணா*
*திருமால் மருகா தினைமா உணியே*
*செழியோன் இறைவா திருநீறு அணிவோய்*
*குரு சூழ் குமரா குனி சானகனே*
*குழகா புலவா குரவு ஆர் புயனே.*

செல்வமே! அன்பே! பிறவாதவனே! வளமையும் அழகும் உள்ள மாணிக்கமே! முத்தலைச் சூலத்தைப் பிடித்தவனே! சருவேசுரனே! ஒப்பற்ற தேவனே! கார்த்திகை மாதரின் சிறந்த மகனே! எல்லா அணிகலன்களையும் அணிந்தவனே! திருமால் மருமகனே! தினைமாவை உண்பவனே! பாண்டியவரசனின்

கடவுளே! திருநீறு அணிவோனே! ஒளிசூழ்ந்த குமரனே! வளையும் வில்லுடையவனே! இளையோனே! புலவனே! குராமலர் அணியும் திருத்தோள்களுடையவனே! 85

## 11. அறுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

32. தனதன தானன தானதனா தானன தானன தானதனா

**திருமலி தாரணி சீர்முருகா சேனைய னேயொளிர் சேயவனே**
**தருமமெ யாரணர் சார்முனியே தானைய னேநல தாயனையாய்**
**செருமலி யாரயில் சேர்கரனே தேனைய னேகமழ் தேயமுளோய்**
**குருமலி நாரருள் கூர்மதியோய் கோனைய னேபல கோயிலுளோய்.**

*திருமலி தார் அணி சீர்முருகா சேனையனே ஒளிர் சேயஅவனே*
*தருமமெய் ஆரணர் சார் முனியே தானையனே நல்ல தாய் அனையாய்*
*செருமலி ஆர் அயில் சேர்கரனே தேன் ஐயனே கமழ் தேயம் உளோய்*
*குருமலி நாரர் உள் கூர்மதியோய் கோன் ஐயனே பல கோயில் உளோய்.*

அழகுமிக்க கிண்கிணி அணியும் அழகிய முருகப் பெருமானே! படையுடையவனே! ஒளிவீசும் செவ்வேளே! அறமும் உண்மையும் உள்ள வேதியர் சாரும் முனியே! படைக்கலம் உடையவனே! நல்ல தாய் போன்றவனே! போர்மிகு கூர்மையான வேற்படை சேரும் திருக்கையனே! இனிய தலைவனே! மணம் வீசும் திருமேனி உள்ளவனே! மேலான அன்புடையார் நினைக்கும் கூர்மையான அறிவுடையவனே! அரசனான தலைவனே! பல கோயில்களில் உள்ளவனே! 86

**திகழ்மறை பாடிடு தேமுதலே தீரமு ளோயறு தேசுருவா**
**சகவுயிர் நாடக சாமிசதா தாரணி வோய்தொழு தாசரணா**
**சிகலறு பாடகர் சேமமுதால் தேரமர் வோய்பல தேசமனா**
**குகைதொறு மாடிடு கோமுருகே கூரமி லோய்சுடர் கோசிகனே.**

*திகழ்மறை பாடிடு தேமுதலே தீரம் உளோய் அறு தேசு உருவா*
*சக உயிர்நாடக சாமி சதா தார் அணிவோய் தொழுதாசர் அணா*
*சிகல் அறு பாடகர் சேம முதால் தேர் அமர்வோய் பல தேச மனா*
*குகைதொறும் ஆடிடு கோமுருகே கூரம் இலோய் சுடர்கோசிகனே.*

விளங்கும் வேதங்கள் பாடிடும் இனிய முதல்வனே! தைரியம் உள்ளவனே! ஆறு ஒளி உரு ஆனவனே! உலக உயிர்களிடம் ஐந்தொழில் நாடகம் செய்யும் சாமியே! எப்போதும் மாலை அணிவோனே! வணங்கும் அடியாரின் தலைவனே! குறைவு இல்லாத பாடகரின் அரணாக உள்ள முதல்வனே! தேரில் அமர்வோனே! பல நாடுகளுக்கும் அரசனே! உயிர்களின் உள்ளக் குகைதொறும் நடம் செய்யும் அரசனான அழகே! கொடுமை இல்லாதவனே! ஒளிவீசும் பட்டு உடை அணிந்தவனே! 87

**சிதலையின் மாசுரர் சேதனனே தீபக மேயறு சீலமுளோய்**
**சதமுனை வாசவர் சாதபதீ தாபமி லோய்விரி சாலமுளோய்**
**சிதடுறு பாசகர் தீதடுகோ சீபதி யேபுகழ் சீலரணால்**
**குதலையென் மாசுகொல் கோதிலியே கோபதி யேயெணில் கோலமுளோய்.**

*சிதலை இல் மாசுரர் சேதனனே தீபகமே அறு சீலம் உளோய்*
*சதமுனை வாசவர் சாதபதீ தாபம் இலோய் விரிசாலம் உளோய்*
*சிதடு உறு உபாசகர் தீது அடுகோ சீபதியே புகழ் சீலர் அணால்*
*குதலை என் மாசுகொல் கோது இலியே கோபதியே எணில் கோலம் உளோய்.*

துன்பம் இல்லாத பெரிய தேவர்களின் ஞானாசிரியனே! விளக்கே! ஆறு குணங்கள் உள்ளவனே! வச்சிராயுதம் உடைய இந்திரனின் மெய்த்தலைவனே! துன்பம் இல்லாதவனே! பரந்த இந்திரசால வித்தை உள்ளவனே! அறியாமை கொண்டுள்ள சீடர்கள் தீச்செயல்களை ஒழிக்கும் அரசனே! பார்வதி அம்மையின் தலைவனே! புகழும் நற்குணமுடையவர் தலைவனே! எண்ணில்லாத மூர்த்தங்கள் உடையவனே! 88

**சிலைவலர் சீயம தீவிரவேள் சேரணி யோயுயர் தேகமுளோய்**
**சலமறு தூயவ சாவிலியே சாரிய னேகுண சாகரமே**
**சிலதர்க ணாயக சீவனியே தேரது லாவறு சேகரனே**
**குலமிலி மாயமில் கோவணனே கோரமி லோயொரு கோகருள்கோன்.**

*சிலை வலர் சீயம் அதீ விர வேள் சேர் அணியோய் உயர்தேகம் உளோய்*
*சலம் அறு தூயவ சாவு இலியே சாரியனே குணசாகரமே*
*சிலதர்கள் நாயக சீவன்நியே தேர் அதுலா அறுசேகரனே*
*குலம் இலி மாயம் இல் கோவணனே கோரம் இலோய் ஒரு கோகு அருள்கோன்.*

வில்வல்லார் முன் சிங்கமே! பெருங்கோபம் உள்ள செவ்வேளே! சேரும் அணிகலன்கள் உள்ளவனே! மகா விசுவரூபத் திருமேனியனே! பொய்யில்லாத் தூயவனே! இறப்பு இல்லாதவனே! வலம் இடம் சாரி வருவோனே! ஞானக் கடலே! அறிஞர்களின் தலைவனே! சஞ்சீவியே! தேவருடைய ஒப்பில்லாதவனே! ஆறு திருமுடிகள் உள்ளவனே! குலம் இல்லாதவனே! பொய்யில்லாத திருக்கோவணம் உடையவனே! அச்சமில்லாத்வனே! ஒரு கழுதைக்கும் அருள்புரிந்த அரசனே! 89

33. தனதன தானா தனனா தனதன தனதன தானதனா

**தெருளர தீதா வரதா திடமுடை மயில்வரு சேவகனே**
**சருவரர் தாழ்தாய் துணையே தடநில வயவறு தாரகனே**
**தெரியல தீசா பரமா திடகுக செயிரறு சீடர்கணா**
**குருகில கோர்மா துகிலோய் குடமுனி வியனிலை கூறரசே.**

*தெருளர் அதீதா வரதா திடம்உடை மயில்வரு சேவகனே*
*சருவரர் தாழ் தாய் துணையே தடநிலவயவு அறு தாரகனே*
*தெரியல் அதுஈசா திடகுக செயிர் அறு சீடர் கணா*
*குருகு இலகு ஓர்மாதுகிலோய் குடமுனி வியன் நிலை கூறு அரசே!*

அறிஞர்க்கும் எட்டாதவனே! வரம் அருள்பவனே! வலிமை யுடைய மயில்வாகனத்தில் வரும் வீரனே! அவியுணவு உண்ணும் தேவர்கள் வணங்கும் தாயின் துணையே! பெரிய மண்ணுலக ஆசையை ஒழிக்கும் பிரணவனே! மாலை அணிந்த பரமேசா! வலிய குகனே! குற்றம் அற்ற அடியார்தம் ஞானக்கண்ணே! கோழி விளங்கும் ஒப்பற்ற பெரிய கொடியுடையவனே! அகத்திய முனிவர்க்கு மேன்நிலை கூறும் அரசனே! 90

**செயல்புரி தேவா விமலா சிறுமையில் பிரதம சேகரனே**
**தயவுளர் தாதா நிபுணா தறுகணர் கருதலர் சார்பிலனே**
**செயமுனி சேயே கழலோய் சிறுகறு மருமறை தேடிறையே**
**குயினிச போதா குழையோய் குறமகள் சுரமகள் கூடருளோய்.**

*செயல்புரி தேவா விமலா சிறுமைஇல் பிரதம சேகரனே*
*தயவுஉளர் தாதா நிபுணா தறுகணர் கருதலர் சார்பு இலனே*
*செயமுனி சேயே கழலோய் சிறுகுஅறும் அருமறை தேடு இறையே*
*குயில் நிசபோதா குழையோய் குறமகள் சுரமகள் கூடுஅருளோய்.*

செயல் செயும் கடவுளே! மலமற்றவனே! குறை இல்லாத முதன்மையான திருமுடியுடையவனே! கருணை உள்ளவரின் தந்தையே! மிக வல்லவனே! குரூரமானவர் உன்னை நினையாத பகைவர் சார்பு இல்லாதவனே! செயமுனிவனின் சேயே! தண்டை அணிந்தவனே! குறைவு அற்ற அரிய வேதங்கள் தேடும் இறைவனே! உபதேசம் செய்யும் உண்மையான ஞானசிரியனே! காதணி அணிந்தவனே! குறமகள் ஆன வள்ளியம்மை, தேவமகளான தெய்வயானை அம்மை ஆகியோரை மணந்த அருளோனே! 91

**செடிதபு காலா சிவனே சிவகண பதியிளை யோய்திணியா**
**சடுவரி வாழ்வே சதுரா சவணர்கண் முதியர்கள் சார்புளனே**
**செடிநகை யாளீ திதியோய் சிவைசுத நதிசுத தேமமுதே**
**கொடுகொடு சீர்வா குதியே குவிபகை மதியினர் கோளரியே.**

*செடிதபு காலா சிவனே சிவகணபதி இளையோய் திணியா*
*சடுஅரி வாழ்வே சதுரா சவணர்கள் முதியர்கள் சார்பு உளனே*
*செடிநகை ஆளீ திதியோய் சிவைசுத நதிசுத தேம் அமுதே*
*கொடுகொடு சீர்வாகுதியே குவிபகை மதியினர் கோளரியே.*

பாவத்தைப் போக்கும் திருவடிகள் உடையவனே! சிவனே! சிவமாகிய கணபதியின் தம்பியே! திண்மையானவனே! ஆறு ஒளியான வாழ்வே! அறிஞனே! புண்ணிய சீலர்கள், கற்றோர்கள் தம் சார்பு உள்ளவனே! குற்றத்தை ஒழிக்கும் ஆண்டவனே! காப்பவனே! பார்வதியின் மைந்தனே! கங்கைநதியின் புதல்வனே! இனிய அமுதமே விரைவாகக் கொடுத்தருள்வாயாக! அழகிய திருத்தோள்கள் உடையவனே! திரண்டபகைப் புத்தியினர்க்குச் சிங்கமே! 92

**சிலைவகிர் சேடா பொருநா சிகிவரை யொலிமுனி தேசிகனே**
**தலைமையர் மீளீ சனதா தகைகெழு புலிமுனி தாழ்பெரியோய்**
**திலகவு லாசா திமிசோய் திகில்வெலும் வலியருள் சீறடிதா**
**குலைமருள் கோலா வனகா குகையுரு மலைவளர் கோமகனே.**

*சிலை வகிர் சேடா பொருநா சிகிவரை ஒலி முனி தேசிகனே*
*தலைமையர் மீளீ அனதா தகைகெழு புலி முனி தாழ் பெரியோய்*
*திலக உலாசா திமிசோய் திகில் வெலும் வலிஅருள் சீறடி தா*
*குலைமருள் கோலா அனகா குகை உரு மலைவளர் கோமகனே.*

கிரௌஞ்ச மலையைப் பிளந்த இளையோனே! வீரா! அருணகிரிநாதர் ஆன சந்தமுனிவனின் ஞானாசிரியனே! தலைமையர் அரசனே! மக்கள் வடிவே! பெருமை பொருந்திய புலிக்கால் முனிவர் வணங்கும் பெரியோனே! மேலாக உள்ள மகிழ்ச்சியுடையவனே! வேங்கைமரம் ஆனவனே! அச்சத்தை வெல்லும் வலிமையை அருளும் சிறிய அடியைத் தந்தருள்வாயாக! மயக்கத்தைக் குலைத்தருள் தண்டபாணியே! தூயவனே! குகைவடிவான மலையில் எழுந்தருளும் அரசனே! 93

34. தனதன தானா தனனா தனதன தானாதனனா

**தெருளர தீதா வரதா செயல்புரி தேவா விமலா**
**சருவரர் தாழ்தாய் துணையே தயவுளர் தாதா நிபுணா**
**தெரியல தீசா பரமா செயமுனி சேயே கழலோய்**
**குருகில கோர்மா துகிலோய் குயினிச போதா குழையோய்.**

*தெருளர் அதீதா வரதா செயல்புரி தேவா விமலா*
*சருவரர் தாழ்தாய் துணையே தயவு உளர் தாதா நிபுணா*
*தெரியல் அதீசா பரமா செயமுனி சேயே கழலோய்*
*குருகு இலகு ஓர் மாதுகிலோய் குயில்நிச போதா குழையோய்.*

அறிஞர்க்கும் எட்டாதவனே! வரம் அருள்பவனே! செயல் செய்யும் கடவுளே! மலம் அற்றவனே! அவியுணவு உண்ணும் தேவர்கள் வணங்கும் தாயின் துணையே! கருணை உள்ளவர் தம் தந்தையே! மிகவல்லவனே! மாலை அணிந்த பரமேசா! பரமனே! செயமுனியின் சேயே! தண்டை அணிந்தவனே! கோழி விளங்கும் ஒப்பற்ற பெரிய கொடிஉடையவனே! உபதேசிக்கும் உண்மையான ஞானாசிரியனே! காதணி அணிந்தோய்! 94

**செயல்புரி தேவா விமலா செடிதபு காலா சிவனே**
**தயவுளர் தாதா நிபுணா சடுவரி வாழ்வே சதுரா**
**செயமுனி சேயே கழலோய் செடிநகை யாளீ திதியோய்**
**குயினிச போதா குழையோய் கொடுகொடு சீர்வா குதியே.**

*செயல் புரி தேவா விமலா செடிதபுகாலா சிவனே*
*தயவு உளர்தாதா நிபுணா சடுஅரி வாழ்வே சதுரா*
*செயமுனி சேயே கழலோய் செடிநகை ஆளீ திதியோய்*
*குயில் நிசபோதா குழையோய் கொடுகொடு சீர் வாகுதியே.*

செயல் செய்யும் கடவுளே! மலம் அற்றவனே! பாவத்தைப் போக்கும் திருவடிகள் உடையவனே! சிவனே! கருணை உள்ளவரின் தந்தையே! மிகவல்லவனே! ஆறு ஒளியான வாழ்வே! அறிஞனே! செயமுனிவரின் சேயே! தண்டை அணிந்தோனே! குற்றத்தை ஒழிக்கும் ஆண்டவனே! காப்பவனே! உபதேசிக்கும் உண்மையான ஞானாசிரியனே! காதணி அணிந்தவனே! அழகிய திருத்தோள்களுடையவனே! விரைவாகக் கொடுப்பாயாக! 95

**செடிதபு காலா சிவனே சிலைவகிர் சேடா பொருநா**
**சடுவரி வாழ்வே சதுரா தலைமையர் மீளீ சனதா**
**செடிநகை யாளீ திதியோய் திலகவு லாசா திமிசோய்**
**கொடுகொடு சீர்வா குதியே குலைமருள் கோலா வனகா.**

*செடிதபுகாலா சிவனே சிலைவ கிர் சேடா பொருநா*
*சடு அரிவாழ்வே சதுரா தலைமையர் மீளீ அனதா*
*செடிநகை ஆளீ திதியோய் திலக உலாசா திமிசோய்*
*கொடு கொடு சீர் வாகுதியே குலைமருள் கோலா அனகா.*

பாவத்தைக் போக்கும் திருவடிகள் உடையவனே! சிவனே! கிரௌஞ்ச மலையைப் பிளந்த இளைஞனே! வீரா! ஆறு ஒளியான வாழ்வே! அறிஞனே! தலைமையர் அரசனே! மக்களின் வடிவமே! குற்றத்தை ஒழிக்கும் ஆண்டவனே! காப்பவனே! மேலான உள்ள மகிழ்ச்சியுடையவனே! வேங்கை மரம் ஆனவனே! அழகிய திருத்தோள்களை உடையவனே! விரைவாகக் கொடுப்பாயாக! மயக்கத்தைக் குலைக்கும் தண்டபாணியே! தூயவனே! 96

35. தானன தானன தானதனா தனதன தானா தனனா

**சேனைய னேயொளிர் சேயவனே தெருளர தீதா வரதா**
**தானைய னேநல தாயனையாய் சருவரர் தாழ்தாய் துணையே**
**தேனைய னேகமழ் தேயமுளோய் தெரியல தீசா பரமா**
**கோனைய னேபல கோயிலுளோய் குருகில கோர்மா துகிலோய்.**

சேனையனே ஒளிர்சேயவனே தெருளர் அதீதா வரதா
தானையனே நல தாய் அனையாய் சருவரர் தாழ் தாய் துணையே
தேன் ஐயனே கமழ்தேயம் உளோய் தெரியல் அதீசா பரமா
கோன் ஐயனே பல கோயில் உளோய் குருகு இலகு ஓர் மாதுகிலோய்.

படையுடையவனே! ஒளிவீசும் செவ்வேளே! அறிஞர்க்கும் எட்டாதவனே! வரம் அளிப்பவனே! படைக்கலம் உடையவனே! நல்லதாய் போன்றவனே! அவியுணவு உண்ணும் தேவர்கள் வணங்கும் தாயின் துணையே! இனிய தலைவனே! மணம் வீசும் திருமேனி உடையவனே! மாலை அணிந்த பரமேசா! பரமனே! அரசரின் தலைவனே! பல கோயில்களில் உள்ளவனே! கோழி விளங்கும் ஒப்பற்ற பெரிய கொடி உடையவனே! 97

**தீரமு ளோயறு தேசுருவா செயல்புரி தேவா விமலா**
**தாரணி வோய்தொழு தாசரணா தயவுளர் தாதா நிபுணா**
**தேரமர் வோய்பல தேசமனா செயமுனி சேயே கழலோய்**
**கூரமி லோய்சுடர் கோசிகனே குயினிச போதா குழையோய்.**

*தீரம் உளோய் அறு தேசு உருவா செயல்புரி தேவா விமலா*
*தார் அணிவோய் தொழுதாசர் அணா தயவு உளர் தாதா நிபுணா*
*தேர் அமர்வோய் பல தேசமனா செயமுனி சேயே கழலோய்*
*கூரம் இலோய் சுடர் கோசிகனே குயில் நிசபோதா குழையோய்.*

தைரியம் உள்ளவனே! ஆறு ஒளி உருவமே! செயல் செய்யும் கடவுளே! மலம் அற்றவனே! மாலை அணிபவனே! வணங்கும் அடியார்தம் தலைவனே! கருணை உள்ளவர்தம் தந்தையே! மிக வல்லவனே! தேரில் அமர்வோனே! பல நாடுகளுக்கும் அரசனே! செயமுனிவனின் சேயே! தண்டை அணிந்தவனே! கொடுமை இல்லாதவனே! ஒளிவீசும் பட்டு உடை உடுத்தவனே! உபதேசிக்கும் உண்மையான ஞானாசிரியனே! காதணி அணிந்தவனே! 98

**தீபக மேயறு சீலமுளோய் செடிதபு காலா சிவனே**
**தாபமி லோய்விரி சாலமுளோய் சடுவரி வாழ்வே சதுரா**
**சீபதி யேபுகழ் சீலரணால் செடிநகை யாளீ திதியோய்**
**கோபதி யேயெணில் கோலமுளோய் கொடுகொடு சீர்வா குதியே.**

*தீபகமே அறு சீலம் உளோய் செடிதபு காலா சிவனே*
*தாபம் இலோய் விரிசாலம் உளோய் சடு அரி வாழ்வே சதுரா*
*சீபதியே புகழ் சீலர் அணால் செடிநகை ஆளீ திதியோய்*
*கோபதியே எணில் கோபம் உளோய் கொடு கொடு சீர் வாகுதியே.*

விளக்கே! ஆறு குணம் உள்ளவனே! பாவத்தைப் போக்கும் திருவடி உடையவனே! சிவனே! துன்பம் இல்லாதவனே! பரந்த இந்திரசால வித்தை உள்ளவனே! ஆறு ஒளியான வாழ்வே! அறிஞனே! பார்வதியின் தலைவனே! புகழும் நிற்குணம் உடையவர் தலைவனே! குற்றத்தை ஒழிக்கும் ஆண்டவனே! காப்பவனே! இந்திரனே! எண்ணில்லாத மூர்த்தங்கள் உள்ளவனே! அழகிய திருத்தோள்கள் உடையவனே! கொடுப்பாயாக! 99

**சேரணி யோயுயர் தேகமுளோய் சிலைவகிர் சேடா பொருநா**
**சாரிய னேகுண சாகரமே தலைமையர் மீளீ சனதா**
**தேரது லாவறு சேகரனே திலகவு லாசா திமிசோய்**
**கோரமி லோயொரு கோகருள்கோ குலைமருள் கோலா வனகா.**

*சேர் அணியோய் உயர் தேகம் உளோய் சிலைவகிர் சேடா பொருநா*
*சாரியனே குணசாகரமே தலைமையர் மீளீ அனதா*
*தேர் அதுலா அறு சேகரனே திலக உலாசா திமிசோய்*
*கோரம் இலோய் ஒருகோகு அருள்கோ குலைமருள் கோலா அனகா.*

சேரும் அணிகலம் உடையவனே! மகாவிசுரூபத் திருமேனி உடையவனே! கிரௌஞ்ச மலையைப் பிளந்த இளையோனே! வீரா! இடம்வலம் சாரி வருவோனே! குணக் கடலே! தலைமையர் அரசனே! மக்கள் வடிவமே! தேருடைய ஒப்பில்லாதவனே! ஆறு திருமுடிகள் உடையவனே! மேலான உள்ள மகிழ்ச்சியுடையவனே! வேங்கை மரம் ஆனவனே! அச்சம் இல்லாதவனே! ஒரு கழுதைக்கும் அருளும் அரசனே! மயக்கத்தைக் கலைக்கும் தண்டபாணியே! தூயவனே! 100

36. தானந் தனதன தானா தனனா தனனா தனனா

**மாவொண் டெருளர தீதா வரதா திருவே பரிவே**
**தூவின் சருவரர் தாழ்தாய் துணையே சருவே சுரனே**
**பாவின் றெரியல தீசா பரமா திருமான் மருகா**
**கூவுங் குருகில கோர்மா துகிலோய் குருசூழ் குமரா.**

*மா ஒண் தெருளர் அதீதா வரதா திருவே பரிவே*
*தூவின் சருவரர் தாழ் தாய் துணையே சருவேசுரனே*
*பாவின் தெரியல் அதீதா பரமா திருமால் மருகா*
*கூவும் குருகு இலகு ஓர் மாதுகிலோய் குருசூழ் குமரா.*

மாட்சியும் ஒளியுமுள்ள அறிஞர்க்கும் எட்டாதவனே! வரமளிப்பவனே! செல்வமே! அன்பே! தூய இனிய அவியுணவு உண்ணும் தேவர்கள் வணங்கும் தாயின் துணையே! சருவேசுரனே! பாமாலை புனையும் பரமேசா! பரமனே! திருமால் மருமகனே! கூவும் கோழி விளங்கும் ஒப்பற்ற பெரிய கொடியை உடையவனே! ஒளி சூழ்ந்த குமரனே! 101

**வேதன் செயல்புரி தேவா விமலா செனியா தவனே**
**நீதந் தயவுளர் தாதா நிபுணா தனிவா னவனே**
**காதுஞ் செயமுனி சேயே கழலோய் தினைமா வுணியே**
**போதங் குயினிச போதா குழையோய் குனிசா னகனே.**

*வேதன் செயல்புரி தேவா விமலா செனியாதவனே*
*நீதம் தயவு உளர் தாதா நிபுணா தனி வானவனே*
*காதும் செயமுனி சேயே கழலோய் தினைமா உணியே*
*போதம் குயில் நிசபோதா குழையோய் குனி சானகனே.*

பிரம தேவனின் படைப்புத் தொழிலைச் செய்யும் கடவுளே! மலம் அற்றவனே! பிறவாதவனே! நீதியும் கருணையும் உள்ளவர் தந்தையே! மிகவல்லவனே! ஒப்பற்ற தேவனே! வகுக்கும் செயமுனி சேயே! தண்டை அணிந்தவனே! தினை மாவை உண்பவனே! ஞானத்தை உபதேசிக்கும் உண்மையான ஞானாசிரியனே! காதணி அணிந்தவனே! வளைந்த வில் உடையவனே! 102

**காலஞ் செடிதபு காலா சிவனே செழுமா மணியே**
**வாலஞ் சடுவரி வாழ்வே சதுரா தழன்மா மகனே**
**ஆலுஞ் செடிநகை யாளீ திதியோய் செழியோ னிறைவா**
**சீலங் கொடுகொடு சீர்வா குதியே குழகா புலவா.**

*காலம் செடிதபு காலா சிவனே செழு மாமணியே*
*வால் அம் சடு அரி வாழ்வே சதுரா தழல் மாமகனே*
*ஆலும் செடிநகை ஆளீ திதியோய் செழியோன் இறைவா*
*சீலம் கொடு கொடு சீர்வாகுதியே குழகா புலவா.*

காலத்தையும் பாவத்தையும் போக்கும் திருவடியுடையவனே! சிவனே! வளமையும் அழகுமுள்ள மாணிக்கமே! தூய அழகிய ஆறு

ஒளி வடிவான வாழ்வே! அறிஞனே! கார்த்திகை மாதர் தம் சிறந்த மகனே! நிறைந்த குற்றத்தை ஒழிக்கும் ஆண்டவனே! காப்பவனே! பாண்டியவரசன் இறைவனே! அழகிய திருத்தோள்களுடையவனே! நற்குணத்தை விரைவாகக் கொடுத்தருள்வாயாக! இளையோனே! புலவனே! 103

**போர்வெஞ் சிலைவகிர் சேடா பொருநா திரிசூ லதரா**
**சார்திண் டலைமையர் மீளீ சனதா சருவா பரணா**
**சீர்வண் டிலகவு லாவா திமிசோய் திருநீ றணிவோய்**
**ஆர்வங் குலைமருள் கோலா வனகா குரவார் புயனே.**

*போர் வெம் சிலைவகிர் சேடா பொருநா திரிசூலதரா*
*சார் திண் தலைமையர் மீளீ சனதா சருவ ஆபரணா*
*சீர் வண் திலக உலாசா திமிசோய் திருநீறு அணிவோய்*
*ஆர்வம் குலைமருள் கோலா அனகா குரவு ஆர் புயனே.*

போர்வல்ல கொடிய கிரௌஞ்ச மலையைப் பிளந்த இளையோனே! வீரனே! முத்தலைச் சூலம் பிடித்தவனே! சாரும் திண்மையான தலைமையர் அரசனே! மீட்சிதரும் அனாத ஈசனே! எல்லா அணிகலன்களும் அணிந்தவனே! அழகும் வளமும் உடைய மேலான உள்ள மகிழ்ச்சியோனே! வேங்கை மரம் ஆனவனே! திருநீறணிந்தவனே! ஆசை மயக்கத்தைக் குலைக்கும் தண்டபாணியே! தூயவனே! குராமலர் சூடும் திருத்தோளனே! 104

37. தனதன தானன தானதனா தனதன தானன தானதனா

**திருமலி தாரணி சீர்முருகா திகழ்மறை பாடிடு தேமுதலே**
**தருமமெ யாரணர் சார்முனியே சகவுயிர் நாடக சாமிசதா**
**செருமலி யாரயில் சேர்கரனே சிகலறு பாடகர் சேமமுதால்**
**குருமலி நாரருள் கூர்மதியோய் குகைதொறு மாடிடு கோமுருகே.**

*திருமலி தார் அணி சீர்முருகா திகழ்மறைபாடிடு தேமுதலே*
*தருமமெய் ஆரணர் சார்முனியே சகஉயிர் நாடக சாமி சதா*
*செருமலி ஆர் அயில் சேர்கரனே சிகல் அறு பாடகர் சேமமுதால்*
*குருமலி நாரர் உள் கூர் மதியோய் குகைதொறும் ஆடிடு கோமுருகே.*

அழகுமிக்க கிண்கிணி மாலை அணிந்த அழகிய முருகப் பெருமானே! விளங்கும் வேதங்கள் பாடிடும் இனிய முதல்வனே! அறமும் உண்மையும் உள்ள வேதியர் சாரும் முனிவனே! எப்போதும் உலக உயிர்களிடம் ஐந்தொழில் நாடகம் செய்யும் சாமியே! போர்மிகு ஒளியுடைய வேற்படை சேர்ந்த திருக்கையனே! குறையில்லாத பாடகரின் அரணாக உள்ள முதல்வனே! மேன்மைமிக்க அன்பர்கள் நினைக்கும் கூர்மையான அறிவுடையவனே! உயிர்களின் உள்ளக் குகைதோறும் நடம் செய்யும் அரசனான அழகே! 105

**திகழ்மறை பாடிடு தேமுதலே சிதலையின் மாசுரர் சேதனனே**
**சகவுயிர் நாடக சாமிசதா சதமுனை வாசவர் சாதபதீ**
**சிகலறு பாடகர் சேமமுதால் சிதடுறு பாசகர் தீதடுகோ**
**குகைதொறு மாடிடு கோமுருகே குதலையென் மாசுகொல் கோதிலியே.**

*திகழ் மறை பாடிடு தேமுதலே சிதலைஇல் மாசுரர் சேதனனே*
*சகஉயிர் நாடக சாமிசதா சதமுனை வாசவர் சாதபதீ*
*சிகல் அறுபாடகர் சேமமுதால் சிதடுஉறு உபாசகர் தீதுஅடுகோ*
*குகைதொறும் ஆடிடு கோ முருகே குதலை என் மாசுகொல் கோது இலியே.*

விளங்கும் வேதங்கள் பாடிடும் இனிய முதல்வனே! துன்பம் இல்லாத பெரிய தேவர்களின் ஞானாசிரியனே! எப்போதும் உலக உயிர்களிடம் ஐந்தொழில் நாடகம் செய்யும் சாமியே! வச்சிராயுதம் உடைய இந்திரனின் மெய்த் தலைவனே! குறைவில்லாத பாடகரின் அரணாக உள்ள முதல்வனே! பேதைமை அறிவுள்ள சீடர்தம் தீச் செயல்களை ஒழிக்கும் தலைவனே! உயிர்களின் உள்ளக் குகைதோறும் நடம் செய்யும் அரசனான அழகே! அறிவிலா என் குற்றத்தை ஒழிக்கும் குற்றமில்லாதவனே! 106

**சிதலையின் மாசுரர் சேதனனே சிலைவலர் சீயம தீவிரவேள்**
**சதமுனை வாசவர் சாதபதீ சலமறு தூயவ சாவிலியே**
**சிதடுறு பாசகர் தீதடுகோ சிலதர்க ணாயக சீவனியே**
**குதலையென் மாசுகொல் கோதிலியே குலமிலி மாயமில் கோவணனே.**

*சிதலைஇல் மாசுரர் சேதனனே சிலைவலர் சீயம் அதீவிரவேள்*
*சதமுனை வாசவர் சாதபதீ சலம் அறு தூயவ சாவு இலியே*
*சிதடுஉறு உபாசகர் தீதுஅடுகோ சிலதர்கள் நாயக சீவனியே*
*குதலை என் மாசுகொல் கோதுஇலியே குலம் இலிமாயம் இல்கோவணனே.*

துன்பம் இல்லாத பெரிய தேவர்களின் ஞானாசிரியனே! வில்வல்லார் முன் சிங்கமே! பெருங்கோபம் உடையவனே! வச்சிராயுதம் உடைய இந்திரன் மெய்த்தலைவனே! பொய்யில்லாத தூயவனே! இறப்பில்லாதவனே! பேதைமை அறிவுடைய சீடர்தம் தீச்செயல்களை ஒழிக்கும் அரசனே! அடியார்களின் தலைவனே! சஞ்சீவியே! அறிவில்லாத என் குற்றத்தை ஒழிக்கும் குற்றமில்லாதவனே! குலம் இல்லாதவனே! பொய் இல்லாத திருக்கோவணம் அணிந்தவனே! 107

## 12. எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

38. தனதன தானன தானன தானன தானன தானன தானதனா

**திருமலி தாரணி சீர்முரு காவடர் சேனைய னேயொளிர் சேயவனே**
**தருமமெ யாரணர் சார்முனி யேகிளர் தானைய னேநல தாயனையாய்**
**செருமலி யாரயில் சேர்கர னேநிறை தேனைய னேகமழ் தேயமுளோய்**
**குருமலி நாரருள் கூர்மதி யோயொரு கோனைய னேபல கோயிலுளோய்.**

*திருமலிதார் அணி சீர் முருகா அடர்சேனையனே ஒளிர் சேய்அவனே*
*தருமமெய் ஆரணர் சார் முனியே கிளர் தானையனே நல தாய் அனையாய்*
*செருமலி ஆர் அயில் சேர்கரனே நிறைதேன் ஐயனே கமழ் தேயம் உளோய்*
*குருமலி நாரர் உள் கூர்மதியோய் ஒரு கோன் ஐயனே பல கோயில் உளோய்.*

அழகுமிக்க கிண்கிணி மாலை அணிந்த அழகிய முருகப் பெருமானே! போர்வல்ல படையுடையவனே! ஒளிவீசும் செவ்வேளே! அறமும் உண்மையும் உள்ள வேதியர் சாரும் முனிவனே! ஒளியுள்ள படைக்கலம் உடையவனே! நல்ல தாய் போன்றவனே! போர் மிகுந்த கூர்மையான வேற்படை சேர்ந்த திருக்கையனே! முழு இன்பமான தலைவனே! மணம் வீசும் திருமேனி உள்ளவனே! மேன்மைமிகு அன்புடையவர் நினைக்கும் கூர்மையான அறிவுடையவனே! ஒரு அரசனின் தலைவனே! பல கோயில்களிலும் உள்ளவனே! 108

**திகழ்மறை பாடிடு தேமுத லேயதி தீரமு ளோயறு தேசுருவா**
**சகவுயிர் நாடக சாமிச தாசிவ தாரணி வோய்தொழு தாசரணா**
**சிகலறு பாடகர் சேமமு தாலுயர் தேரமர் வோய்பல தேசமனா**
**குகைதொறு மாடிடு கோமுரு கேயிடர் கூரமி லோய்சுடர் கோசிகனே.**

*திகழ்மறை பாடிடு தேமுதலே அதிதீரம் உளோய் அறு தேசஉருவா*
*சகஉயிர் நாடக சாமி சதாசிவ தார்அணிவோய் தொழுதாசர் அணா*
*சிகல் அறு பாடகர் சேம முதால் உயர் தேர் அமர்வாய் பல தேசமனா*
*குகைதொறும் ஆடிடு கோமுருகே இடர் கூரம் இலோய் சுடர் கோசிகனே.*

விளங்கும் வேதங்கள் பாடிடும் இனிய முதல்வனே! மிக்க தைரியம் உள்ளவனே! ஆறு ஒளி உருவானவனே! உலக உயிர்களிடம் ஐந்தொழில் நாடகம் செய்யும் சாமியே! சதாசிவனே! மாலை அணிவோனே! வணங்கும் அடியார்தம் தலைவனே! குறையில்லாத பாடகர் அரணாக உள்ள முதல்வனே! உயர்ந்த தேரில் அமர்வோனே! பல நாடுகளின் அரசனே! உயிர்களின் உள்ளக் குகைதோறும் நடம் செய்யும் அரசனான அழகே! துன்பமும் கொடுமையும் இல்லாதவனே! ஒளிவீசும் பட்டுடை உடுத்தவனே! 109

**சிதலையின் மாசுரர் சேதன னேசுக தீபக மேயறு சீலமுளோய்**
**சதமுனை வாசவர் சாதப தீயொரு தாபமி லோய்விரி சாலமுளோய்**
**சிதடுறு பாசகர் தீதடு கோபர சீபதி யேபுகழ் சீலரணால்**
**குதலையென் மாசுகொல் கோதிலி யேநிமிர் கோபதி யேயெணில் கோலமுளோய்.**

*சிதலைஇல் மாசுரர் சேதனனே சுக தீபகமே அறுசீலம் உளோய்*
*சதமுனை வாசவர் சாதபதீ ஒரு தாபம் இலோய் விரிசாலம் உளோய்*
*சிதடுஉறு உபாசகர் தீது அடு கோபர சீபதியே புகழ்சீலர் அணால்*
*குதலை என்மாசு கொல் கோது இலியே நிமிர்கோபதியே எணில் கோலம் உளோய்.*

துன்பம் இல்லாத பெரிய தேவர்கள் தம் ஞானாசிரியனே! இன்ப விளக்கே! ஆறு குணங்கள் உள்ளவனே! வச்சிராயுதம் உடைய இந்திரனின் மெய்த்தலைவனே! ஒரு துன்பமும் இல்லாதவனே! பரந்த இந்திரசால வித்தை உள்ளவனே! பேதைமை அறிவுடைய சீடர்தம் தீச்செயல்களை ஒழிக்கும் அரசனே! மேலான பார்வதியின் தலைவனே! புகழும் நற்குணமுடையவர் தம் தலைவனே! அறிவில்லாத என் குற்றத்தை ஒழிக்கும் குற்றமில்லாதவனே! உயர்ந்த இந்திரனே! எண்ணில்லாத மூர்த்தங்கள் உள்ளவனே! 110

**சிலைவலர் சீயம தீவிர வேண்மணி சேரணி யோயுயர் தேகமுளோய்**
**சலமறு தூயவ சாவிலி யேமிகு சாரிய னேகுண சாகரமே**
**சிலதர்க ணாயக சீவனி யேதுதி தேரது லாவறு சேகரனே**
**குலமிலி மாயமில் கோவண னேயிழி கோரமி லோயொரு கோகருள்கோன்.**

சிலைவலர் சீயம் அதீவிரவேள் மணிசேர் அணியோய் உயர் தேகம் உளோய்
சலம் அறு தூயவ சாவு இலியே மிகு சாரியனே குண சாகரமே
சிதலர்கள் நாயக சீவனியே துதிதேர் அதுலா அறு சேகரனே
குலம் இலி மாயம் இல் கோவணனே இழிகோரம் இலோய் ஒரு கோகு அருள்கோன்.

வில்வல்லார் முன் சிங்கமே! பெருங்கோபம் உடையவனே! மாணிக்கம் சேர்ந்த அணிகலன் உடையவனே! மகாவிசுவரூபத் திருமேனி உடையவனே! பொய்யில்லாத் தூயவனே! இறப்பு இல்லாதவனே! மிக்க இடம் வலம் எனச் சாரி வருபவனே! குணக்கடலே! அடியார்கள் தலைவனே! சஞ்சீவியே! துதிக்கும் தேருடைய ஒப்பில்லாதவனே! ஆறு திருமுடிகள் அணிந்தவனே! குலம் இல்லாதவனே! பொய் இல்லாத கோவணம் உள்ளவனே! கீழான அச்சம் இல்லாதவனே! ஒரு கழுதைக்கும் அருள்புரிந்த அரசனே! 111

39. தானன தானன தானன தானாதந் தனதன தானா தனனா

**சேனைய னேயொளிர் சேயவ னேமாவொண் டெருளர தீதா வரதா**
**தானைய னேநல தாயனை யாய்தூவின் சருவரர் தாழ்தாய் துணையே**
**தேனைய னேகமம் தேயமு ளோய்பாவின் றெரியல தீசா பரமா**
**கோனைய னேபல கோயிலு ளோய்கூவுங் குருகில கோர்மா துகிலோய்.**

சேனையனே ஒளிர் சேயவனே மாஒண்தெருளர் அதீதா வரதா
தானையனே நலதாய் அனையாய் தூவின் சருவரர் தாழ்தாய் துணையே
தேன்ஐயனே கமழ் தேயம் உளோய் பாவின் தெரியல் அதீசா பரமா
கோன் ஐயனே பலகோயில் உளோய் கூவும் குருகு இலகு ஓர் மாதுகிலோய்.

படையுடையவனே! ஒளிவீசும் செவ்வேளே! மாட்சியும் ஒளியும் உள்ள அறிஞர்க்கும் எட்டாதவனே! படைக்கலம் உடையவனே! நல்ல தாய் போன்றவனே! தூய இனிய அவியுணவு உண்ணும் தேவர்கள் வணங்கும் தாயின் துணையே! இனிய தலைவனே! மணக்கும் உடம்பு உள்ளவனே! பாமாலை அணியும் பரமேசா! பரமனே! அரசனின் தலைவனே! பல கோயில்களில் உள்ளவனே! கூவும் கோழி விளங்கும் ஒப்பற்ற பெரிய கொடி உடையவனே! 112

**தீரமு ளோயறு தேசுரு வாவேதன் செயல்புரி தேவா விமலா**
**தாரணி வோய் தொழு தாசர ணாநீதந் தயவுளர் தாதா நிபுணா**
**தேரமர் வோய்பல தேசம னாகாதுஞ் செயமுனி சேயே கழலோய்**
**கூரமி லோய்சுடர் கோசிக னேபோதங் குயினிச போதா குழையோய்.**

*தீரம் உளோய் அறு தேசுஉருவா வேதன் செயல்புரி தேவா விமலா*
*தார் அணிவோய் தொழு தாசர் அணா நீதம் தயவு உளர் தாதா நிபுணா*
*தேர் அமர்வோய் பல தேசம்அனா காதும் செயமுனி சேயே கழலோய்*
*கூரம் இலோய் சுடர்கோசிகனே போதம் குயில் நிசபோதா குழையோய்.*

தைரியம் உள்ளவனே! ஆறு ஒளி வடிவு ஆனவனே! பிரமதேவனின் படைப்புத் தொழிலைச் செய்த கடவுளே! மலம் அற்றவனே! கிண்கிணி மாலை அணிவோனே! வணங்கும் அடியார்தம் தலைவனே! நீதியும் கருணையும் உள்ளவர் தந்தையே! மிகவல்லவனே! தேரில் அமர்வோனே! பல நாடுகளுக்கும் அரசனே! வகுக்கும் செய முனியின் சேயே! தண்டை அணிந்தவனே! கொடுமை இல்லாதவனே! ஒளிவீசும் பட்டுஉடை அணிந்தவனே! ஞானத்தை உபதேசிக்கும் உண்மையான ஞானாசிரியனே! காதணி அணிந்தவனே! 113

**தீபக மேயறு சீலமு ளோய்காலஞ் செடிதபு காலா சிவனே**
**தாபமி லோய்விரி சாலமு ளோய்வாலஞ் சடுவரி வாழ்வே சதுரா**
**சீபதி யேபுகழ் சீலர ணாலாலுஞ் செடிநகை யாளீ திதியோய்**
**கோபதி யேயெணில் கோலமு ளோய்சீலங் கொடுகொடு சீர்வா குதியே.**

*தீபகமே அறு சீலம் உளோய் காலம்செடி தபு காலா சிவனே*
*தாபம் இலோய் விரிசாலம் உளோய் வால்அம் சடுஅரி வாழ்வே சதுரா*
*சீபதியே புகழ் சீலர் அணால் ஆலும் செடிநகை ஆளீ திதியோய்*
*கோபதியே எணில் கோலம் உளோய் சீலம் கொடு கொடு சீர் வாகுதியே.*

விளக்கே! ஆறு குணங்கள் உள்ளவனே! காலமும் பாவமும் ஒழிக்கும் திருவடியுடையவனே! சிவனே! துன்பம் இல்லாதவனே! பரந்த இந்திரசால வித்தை உள்ளவனே! தூய அழகிய ஆறு ஒளியான வாழ்வே! அறிஞனே! பார்வதியின் தலைவனே! புகழும் நற்குணம் உடையார் தலைவனே! நிறைந்த பாவத்தை ஒழிக்கும் ஆண்டவனே! காப்பவனே! இந்திரனே! எண்ணில்லாத மூர்த்தங்கள் உடையவனே! அழகிய தோல் உடையவனே! நற்குணத்தை விரைந்து கொடுப்பாயாக! 114

**சேரணி யோயுயர் தேகமு ளோய்போர்வெஞ் சிலைவகிர் சேடாபொருநா**
**சாரிய னேகுண சாகர மேசார்திண் டலைமையர் மீளீ சனதா**
**தேரது லாவறு சேகர னேசீர்வண் டிலகவு லாசா திமிசோய்**
**கோரமி லோயொரு கோகருள் கோனார்வங் குலைமருள் கோலா வனகா.**

*சேர் அணியோய் உயர்தேகம் உளோய் போர்வெம் சிலைவகிர்சேடா பொருநா*
*சாரியனே குண சாகரமே சார்திண் தலைமையர் மீளீ அனதா*
*தேர் அதுலா அறு சேகரனே சீர்வண் திலக உலாசா திமிசோய்*
*கோரம் இலோய் ஒரு கோகு அருள் கோன் ஆர்வம் குலைமருள் கோலா அனகா.*

சேரும் அணிகள் உடையவனே! மகாவிசுவரூபத் திருமேனியனே! போர்வல்ல கொடிய கிரௌஞ்ச மலையைப் பிளந்த இளையோனே! வீரனே! இடம் வலம் எனச் சாரி வருவோனே! குணக்கடலே! சாரும் உறுதியான தலைமையர் அரசனே! மக்கள் வடிவமே! தேர் உடைய ஒப்பில்லாதவனே! ஆறு திருமுடிகள் உடையவனே! அழகும் வளமையும் உள்ள மேலான உள்ள மகிழ்ச்சியுள்ளவனே! வேங்கை மரம் ஆனவனே! அச்சம் இல்லாதவனே! ஒரு கழுதைக்கும் அருள்புரிந்த அரசனே! ஆசை மயக்கத்தைக் குலைக்கும் தண்டபாணியே! தூயவனே! 115

40. தானன தானாதந் தனதன தானா தனனா தனனா தனனா

**சேயவ னேமாவொண் டெருளர தீதா வரதா திருவே பரிவே**
**தாயனை யாய்தூவின் சருவரர் தாழ்தாய் துணையே சருவே சுரனே**
**தேயமு ளோய்பாவின் றெரியல தீசா பரமா திருமான் மருகா**
**கோயிலு ளோய்கூவுங் குருகில கோர்மா துகிலோய் குருசூழ் குமரா.**

*சேய்அவனே மாஒண் தெருளர் அதீதா வரதா திருவே பரிவே*
*தாய் அனையாய் தூவின் சருவரர் தாழ்தாய் துணையே சருவேசுரனே*
*தேயம் உளோய் பாவின் தெரியல் அதீசா பரமா திருமால் மருகா*
*கோயில் உளோய் கூவும் குருகு இலகு ஓர் மாது கிலோய் குருசூழ் குமரா.*

செவ்வேளே! மாட்சியும் ஒளியும் உள்ள அறிஞர்க்கும் எட்டாதவனே! வரமளிப்பவனே! செல்வமே! அன்பே! தாய் போன்றவனே! தூய இனிய அவியுணவு உண்ணும் தேவர்கள் வணங்கும் தாயின் துணையே! சருவேசுரனே! உடம்பு உள்ளவனே! பாமாலை சூட்டுவோரின் பரமேசா! பரமனே! திருமாலின் மருமகனே! கோயிலில் உள்ளவனே! கூவும் கோழி விளங்கும் ஒப்பற்ற பெரிய கொடி உடையவனே! ஒளிரும் குமரனே! 118

**தேசுரு வாவேதன் செயல்புரி தேவா விமலா செனியா தவனே**
**தாசர ணாநீதந் தயவுளர் தாதா நிபுணா தனிவா னவனே**
**தேசம னாகாதுஞ் செயமுனி சேயே கழலோய் தினைமா வுணியே**
**கோசிக னேபோதங் குயினிச போதா குழையோய் குனிசா னகனே.**

*தேசுஉருவா வேதன் செயல்புரிதேவா விமலா செனியாதவனே*
*தாசர் அணா நீதம் தயவு உளர் தாதா நிபுணா தனி வானவனே*
*தேசம்அனா காதும் செயமுனிசேயே கழலோய் தினைமா உணியே*
*கோசிகனே போதம் குயில் நிசபோதா குழையோய் குனி சானகனே.*

ஒளி வடிவு ஆனவனே! பிரமதேவன் படைப்புத் தொழிலைச் செய்த கடவுளே! மலம் அற்றவனே! பிறவாதவனே! அடியார் தலைவனே! நீதியும் கருணையும் உள்ளவர் தந்தையே! மிகவல்லவனே! ஒப்பற்ற தேவனே! நாட்டின் அரசனே! வகுக்கும் செயமுனி சேயே! தண்டை அணிந்தோனே! தினை மாவு உண்பவனே! பட்டு உடை உடுத்தவனே! ஞானத்தை உபதேசிக்கும் உண்மையான ஞானாசிரியனே! காதணியணிந்தோனே! வளையும் வில் உடையவனே! 117

**சீலமு ளோய்காலஞ் செடிதபு காலா சிவனே செழுமா மணியே**
**சாலமு ளோய்வாலஞ் சடுவரி வாழ்வே சதுரா தழன்மா மகனே**
**சீலர ணாலாலுஞ் செடிநகை யாளீ திதியோய் செழியோ னிறைவா**
**கோலமு ளோய்சீலங் கொடுகொடு சீர்வா குதியே குழகா புலவா.**

*சீலம் உளோய் காலம் செடி தபுகாலா சிவனே செழுமாமணியே*
*சாலம் உளோய் வால் அம் சடுஅரி வாழ்வே சதுராதழல் மாமகனே*
*சீலர் அணால் ஆலும் செடி நகை ஆளீ திதியோய் செழியோன் இறைவா*
*கோலம் உளோய் சீலம் கொடு கொடு சீர்வாகுதியே குழகா புலவா.*

அருட்குணம் உள்ளவனே! காலத்தையும் பாவத்தையும் அழிக்கும் திருவடியுடையவனே! சிவனே! வளமான அழகிய மாணிக்கமே! இந்திரசால வித்தை உள்ளவனே! தூய அழகிய ஆறு ஒளியான வாழ்வே! அறிஞனே! கார்த்திகை மாதர்தம் சிறந்த மகனே! நற்குணம் உள்ளவரின் தலைவனே! நிறைந்த குற்றத்தை ஒழிக்கும் ஆண்டவனே! காப்பவனே! பாண்டிய அரசனின் இறைவனே! மூர்த்தமாக உள்ளவனே! அழகிய தோள்கள்

உடையவனே! நல்ல குணத்தை விரைந்து கொடுப்பாயாக! இளையோனே! புலவனே! 118

**தேகமு ளோய்போர்வெஞ் சிலைவகிர் சேடா பொருநா திரிசூ லதரா**
**சாகர மேசார்திண் டலைமையர் மீளீ சனதா சருவா பரணா**
**சேகர னேசீர்வண் டிலகவு லாசா திமிசோய் திருநீ றணிவோய்**
**கோகருள் கோனார்வங் குலைமருள் கோலா வனகா குரவார் புயனே.**

தேகம் உளோய் போர்வெம் சிலைவகிர் சேடா பொருநா திரி சூல்அதரா
சாகரமே சார் திண்தலைமையர் மீளீ சனதா சருவ ஆபரணா
சேகரனே சீர் வண் திலக உலாசா திமிசோய் திருநீறு அணிவோய்
கோகு அருள் கோன் ஆர்வம் குலைமருள் கோலா அனகா குரவு ஆர் புயனே.

திருமேனி உள்ளவனே! போர்வல்ல கொடிய கிரௌஞ்ச மலையைப் பிளந்த இளையோனே! வீரனே! முத்தலைச் சூலம் பிடித்தவனே! கடலே! சாரும் உறுதியான தலைமையர் அரசனே! மக்கள் வடிவே! எல்லா அணிகலன்களும் அணிந்தவனே! திருமுடி உடையவனே! அழகும் வளமையும் உள்ள மேலான மகிழ்ச்சியுடையவனே! வேங்கை மரம் ஆனவனே! திருநீறு அணிபவனே! கழுதைக்கும் அருள்புரிந்த அரசனே! ஆசை மயக்கத்தைக் கலைக்கும் தண்டபாணியே! தூயவனே! குராமலர் அணியும் தோள்கள் உடையவனே! 119

## 13. எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

41. தனதன தானா தனனா தனனா தனனா தனதன தனதன தானதனா

**தெருளர தீதா வரதா திருவே பரிவே திடமுடை மயில்வரு சேவகனே**
**சருவரர் தாழ்தாய் துணையே சருவே சுரனே தடநில வயவறு தாரகனே**
**தெரியல தீசா பரமா திருமான் மருகா திடகுக செயிரறு சீடர்கணா**
**குருகில கோர்மா துகிலோய் குருசூழ் குமரா குடமுனி வியனிலை கூறரசே.**

தெருளர் அதீதா வரதா திருவே பரிவே திடம் உடை மயில் வருசேவகனே
சருவரர் தாழ் தாய் துணையே சருவேசுரனே தடநில வயவு அறு தாரகனே
தெரியல் அதீசா பரமா திருமால் மருகா திட குக செயிர் அறு சீடர்கணா
குருகுஇலகு ஓர் மாதுகிலோய் குருசூழ் குமரா குடமுனி வியன் நிலை கூறு அரசே.

அறிஞர்க்கும் எட்டாதவனே! செல்வமே! அன்பே! வலிமை உடைய மயில்வாகனம் மீது வரும் வீரனே! அவி உணவு உண்ணும் தேவர்கள் வணங்கும் தாயின் துணையே! சருவேசுரனே! பெரிய மண்ணுலக ஆசையை அறுக்கும் பிரணவனே! மாலை அணிந்த பரமேசா! பரமனே! திருமால் மருகனே! திடமான பெருமானே! குற்றம் அற்ற அடியார்தம் ஞானக் கண்ணே! கோழி விளங்கும் ஒப்பற்ற பெரிய கொடி உடையவனே! ஒளி சூழ்ந்த குமரனே! அகத்திய முனிவர்க்கு மேலான நிலையை உபதேசித்த அரசனே! 120

**செயல்புரி தேவா விமலா செனியா தவனே சிறுமையில் பிரதம சேகரனே**
**தயவுளர் தாதா நிபுணா தனிவா னவனே தறுகணர் கருதலர்சார்பிலனே**
**செயமுனி சேயே கழலோய் தினைமா வுணியே சிறுகறு மருமறை தேடிறையே**
**குயினிச போதா குழையோய் குனிசா னகனே குறமகள் சுரமகள் கூடருளோய்.**

*செயல் புரி தேவா விமலா செனியாதவனே சிறுமை இல் பிரதம சேகரனே*
*தயவு உளர் தாதா நிபுணா தனிவானவனே தறுகணர் கருதலர் சார்பு இலனே*
*செயமுனி சேயே கழலோய் தினைமா உணியே சிறுகு அறு அருமறை தேடு இறையே*
*குயில் நிச குழையோய் குனி சானகனே குறமகள் சுரமகள் கூடு அருளோய்.*

செயல் செய்யும் கடவுளே! மலம் அற்றவனே! பிறவாதவனே! குறை இல்லாத முதன்மையான திருமுடி அணிந்தவனே! கருணை உள்ளவர்தம் தந்தையே! மிக வல்லவனே! ஒப்பற்ற தேவனே! குரூரமானவர் உன்னை நினையாத பகைவர் தம் சார்பு இல்லாதவனே! செயமுனிவனின் சேயே! தண்டை அணிந்தவனே! தினை மாவு உண்பவனே! துன்பம் அற்ற அரிய வேதங்கள் தேடும் இறைவனே! உபதேசிக்கும் மெய்யனே! காதணி அணிந்தவனே! வளையும் வில் உடையவனே! குறமகளான வள்ளியம்மையையும் தேவமகளான தெய்வானையையும் மணந்த அருள் உள்ளவனே! 121

**செடிதபு காலா சிவனே செழுமா மணியே சிவகண பதியிளை யோய்திணியா**
**சடுவரி வாழ்வே சதுரா தழன்மா மகனே சவணர்கண் முதியர்கள் சார்புளனே**
**செடிநகை யாளீ திதியோய் செழியோ னிறைவா சிவைசுத நதிசுத தேமமுதே**
**கொடுகொடு சீர்வா குதியே குழகா புலவா குவிபகை மதியினர் கோளரியே.**

*செடிதபு காலா சிவனே செழுமாமணியே சிவகணபதி இளையோய் திணியா*
*சடுஅரி வாழ்வே சதுரா தழல் மாமகனே சவணர்கள் முதியர்கள் சார்புஉளனே*
*செடிநகை ஆளீ திதியோய் செழியோன் இறைவா சிவைசுத நதிசுத தேம் அமுதமே*
*கொடுகொடு சீர் வாகுதியே குழகா புலவா குவிபகைமதியினர் கோள்அரியே.*

பாவத்தைப் போக்கும் திருவடியுடையவனே! சிவனே! வளமையும் அழகும் உள்ள மாணிக்கமே! சிவமாகிய கணபதியின் தம்பியே! திண்ணியனே! ஆறு ஒளியான வாழ்வே! அறிஞனே! கார்த்திகை மாதர்தம் சிறந்த மகனே! புண்ணியசீலர், கற்றவர் தம் சார்பில் உள்ளவனே! குற்றத்தை ஒழிக்கும் ஆண்டவனே! காப்பவனே! பாண்டிய அரசனின் இறைவனே! உமையம்மையின் மைந்தனே! கங்கையின் மகனே! இனிய அமுதமே, விரைவாகக் கொடுப்பாயாக! அழகிய தோள்கள் உடையவனே! இளையோனே! புலவனே! திரண்டபகைப் புத்தியினர்க்குச் சிங்கமே! 122

**சிலைவகிர் சேடா பொருநா திரிசூ லதரா சிகிவரை யொலிமுனி தேசிகனே**
**தலைமையர் மீளீ சனதா சருவா பரணா தகைகெழ புலிமுனி தாழ்பெரியோய்**
**திலகவு லாசா திமிசோய் திருநீ றணிவோய் திகில்வெலும் வலியருள்சீறடிதா**
**குலைமருள் கோலா வனகா குரவார் புயனே குகையுரு மலைவளர் கோமகனே!**

*சிலைவகிர் சேடா பொருநா திரிசூலதரா சிகிவரை ஒலி முனி தேசிகனே*
*தலைமையர் மீளீ சனதா சருவ ஆபரணா தகைகெழு புலிமுனி தாழ் பெரியோய்*
*திலக உலாசா திமிசோய் திரு நீறு அணிவோய் திகில்வெலும் வலி அருள் சீறடிதா*
*குலைமருள் கோலா அனகா குரவு ஆர் புயனே குகை உருமலை வளர் கோமகனே!*

கிரௌஞ்ச மலையைப் பிளந்த இளையோனே! வீரனே! முத்தலைச் சூலம் பிடித்தவனே! அருணகிரிநாதர் ஆன சந்தமுனிவனின் ஞானாசிரியனே! தலைமையர் அரசனே! மக்கள் வடிவானவனே! எல்லா ஆபரணமும் அணிந்தவனே! பெருமை பொருந்திய புலிக்கால் முனிவர் வணங்கும் பெரியோனே! மேலான உள்ள மகிழ்ச்சியுள்ளவனே! வேங்கை மரம் ஆனவனே! திருநீறு அணிவோனே! அச்சம் வெல்லும் வலிமை அருளும் சிறிய அடியைத் தருவாயாக! மயக்கத்தைக் குலைக்கும் தண்டபாணியே! தூயவனே! குரா மலர் மாலை அணியும் தோள்கள் உடையவனே! குகை உருவான மலையில் எழுந்தருளும் அரசனே! 123

## 14. ஒன்பதின்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

42. தானன தானன தானன தானாதந்
தனனா தனனா தனதன தனதன தானதனா

**சேனைய னேயொளிர் சேயவ னேமாவொண்**
**டிருவே பரிவே திடமுடை மயில்வரு சேவகனே**
**தானைய னேநல தாயனை யாய்தூவின்**
**சருவே சுரனே தடநில வயவறு தாரகனே**
**தேனைய னேகமழ் தேயமு ளோய்பாவின்**
**றிருமான் மருகா திடகுக செயிரறு சீடர்கணா**
**கோனைய னேபல கோயிலுளோய் கூவுங்**
**குருசூழ் குமரா குடமுனி வியனிலை கூறரசே.**

சேனையனே ஒளிர் சேயவனே மா ஒண்
திருவே பரிவே திடம் உடை மயில் வரு சேவகனே
தானையனே நல தாய் அனையாய் தூவின்
சருவேசுரனே தடநில வயவு அறு தாரகனே
தேன் ஐயனே கமழ் தேயம் உளோய் பாவின்
திருமால் மருகா திடகுக செயிர் அறு சீடர் கணா
கோன் ஐயனே பல கோயில் உளோய் கூவும்
குருசூழ் குமரா குடமுனிவியன் நிலை கூறு அரசே.

படை உடையவனே! ஒளிவீசும் செவ்வேளே! அழகும் அறிவும் உள்ள தெய்வமே! அன்பே! வலிமை உடைய மயில் வாகனத்தின் வீரனே! படைக்கலம் உடையவனே! நல்ல தாய் போன்றவனே! தூய இனிய சருவேசுரனே! பெரிய மண்ணுலகத்தின் ஆசையை அறுக்கும் பிரணவனே! இனிய தலைவனே! மணம் வீசும் திருமேனி உள்ளவனே! பாடப்பெறும் திருமாலின் மருமகனே! மெய்க்குகனே! குற்றம் அற்ற அடியார்தம் ஞானக் கண்ணே! அரசனின் தலைவனே! பல கோயில்களில் உள்ளவனே! அழைக்கும் ஒளி சூழ்ந்த குமரனே! அகத்திய முனிவர்க்கு மேலான நிலையை உபதேசித்த அரசனே! 124

**சேரணி யோயுயர் தேகமு ளோய்போர்வெந்**
**திரிசூ லதரா சிகிவரை யொலிமுனி தேசிகனே**
**சாரிய னேகுண சாகர மேசார்திண்**
**சருவா பரணா தகைகெழு புலிமுனி தாழ்பெரியோய்**
**தேரது லாவறு சேகர னேசீர்வண்**
**டிருநீ றணிவோய் திகில்வெலும் வலியருள் சீறடிதா**
**கோரமி லோயொரு கோகருள் கோனார்வங்**
**குரவார் புயனே குகையுரு மலைவளர் கோமகனே.**

*சேர் அணியோய் உயர் தேகம் உளோய் போர்வெந்*
*திரிசூல தரா சிகிவரை ஒலி முனி தேசிகனே*
*சாரியனே குணசாகரமே சார்திண்*
*சருவ ஆபரணா தகைகெழு புலிமுனி தாழ் பெரியோய்*
*தேர் அதுலா அறு சேகரனே! சீர்வண்*
*திரு நீறு அணிவோய் திகில் வெலும் வலி அருள் சீறடிதா*
*கோரம் இலோய் ஒரு கோகு அருள் கோன் ஆர்வம்*
*குரவு ஆர் புயனே! குகை உரு மலை வளர் கோமகனே.*

சேரும் அணிகலன் உடையவனே! மகாவிசுவரூபத் திருமேனியனே! போர்வல்ல கொடிய முத்தலைச் சூலம் பிடித்தவனே! அருணகிரிநாதர் ஆன சந்த முனிவரின் ஞானாசிரியனே! இடம் வலம் எனச் சாரி வருபனே! குணக்கடலே! சாரும் திண்மையும் எல்லா அணிகலன்களும் உடையவனே! பெருமை பொருந்திய புலிக்கால் முனிவர் வணங்கும் பெரியோனே! தேருடைய ஒப்பில்லாதவனே! அச்சம் வெல்லும் வலிமை அருளும் சிறிய திருவடியைத் தருவாயாக. அச்சம் இல்லாதவனே! ஒரு கழுதைக்கும் அருள்புரிந்த அரசனே! ஆர்வத்துடன் குரா மலர் மாலை அணியும் திருத்தோளனே! குகை உருவான மலையில் எழுந்தருளியுள்ள அரசனே! 125

99. ஆம் பிரபந்தத்துள் பத்துச்செய்யுளை யுள்ளடக்கிய எரிவரைக்குகன் தசபங்கி யெனும் ஒரு பாட்டை ஆசிரியர் பாடித் தமக்கு முன்பாக விருக்கின்ற ஒரு நண்பரிடங் காட்டினர். சென்னை வாசியாய அவர், நூறு செய்யுளை யுள்ளடக்கிய சதபங்கியை இரண்டு மாதத்திற் கதிகமான காலங்காறும் பிரயாசப்பட்டு, பண்டிதர் -

வேலாயுத முதலியார் செய்து முடித்தார். அதனை யான் காணக் கிடைக்கவில்லை யென்று கூறினதைக் கேட்ட ஆசிரியர், அவ்வியப்புக் கருதி இறைவனைச் சிந்தித்திருந்து 125 - வண்ணச் செய்யுள்களை யடக்கியுள்ள இம்மகா விசித்திர விசேட கவியை இரண்டரைக் கடிகையுட் பாடியருளினர். இத்திறப்பாட் டொன்றனை எந்நூலகத்துங் காண்டல் கூடுமோ? இது துறவற நிலையடைந்தபின் பாடப்பட்டு இப்பாடலோடு சேர்க்கப்பட்டதாம்.

இப்பங்கியுள் அலகிடப்பட்டவைகளுள் - சில வஞ்சிவிருத்தம் 2 - பங்கியும், தரவு கொச்சகக்கலிப்பா 6 - பங்கியும், கலிவிருத்தம் 4 - 3 - பங்கியும், கலிநிலைத்துறை 4-6-3- பங்கியும், கட்டளைக்கலித்துறை 4-3- பங்கியும், அறுசீராசிரிய விருத்தம் 6-5-7-பங்கியும், எழுசீராசிரிய விருத்தம் 7-10-பங்கியும், எண்சீராசிரிய விருத்தம் 8-பங்கியும், ஒன்பதின்சீராசிரிய விருத்தம் 11-பங்கியுமாகத் தனித்தனி நிற்கு நிரலுமுணர்க.

| | | |
|---|---|---|
| ***ஆகப்பிரபந்தம் எழுபத்து நான்கினும் போந்த திருப்பாடல்*** | - | ***1263*** |
| ***கடவுள் வணக்கச் செய்யுள்*** | - | ***3*** |
| ***ஆகத்திருப்பாடல்*** | - | ***1266*** |